விலை சதம் 25

# ஈழநாடு

மலர்: 15 | The Eelanaadu | இதழ்: 54

[illegible] | தை 20 | முஹர்ரம் 8 | சனிக்கிழமை | 2 2 74

-4 FEB 1974

போன்: 654 ஸ்தாபிதம் 1927
எழில் மிகுந்த
தங்க-வைர நகைகளுக்கு
ஹாஜியார்ஸ்
நகை மாளிகை
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
கிளை: 66 & 68, செட்டியார் தெரு, கொழும்பு-11.

# 44 லட்சம் பெறுமான கடத்தல் பொருட்கள் வடக்கில் சிக்கின!

## அரசாங்க அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், சனி) வடபகுதியில் கடத்தல் எதிர்ப்பு நடவடிக்கையால் கடந்த வருடம் சுமார் 44 லட்சம் ரூபா பெறுமதியான கடத்தல் சாமான்கள் கைப்பற்றப்பட்டன. கடத்தல்காரருக்கு சுமார் 7 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ். அரசாங்க செயலகத்தில் நேற்றுக்காலை நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில், அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா மேற்கண்ட தகவலைத் தெரிவித்தார்.

அரசாங்க அதிபர் மேலும் தெரிவித்ததாவது: கடந்த வருடம் 44,96,874 ரூபா பெறுமதியான கடத்தல் சாமான்கள் கைப்பற்றப்பட்டது. இவற்றில் 35,93,269 ரூபா பெறுமதியான பொருட்கள் கடத்தப்பட்டு வரும்போதும், 903,605 ரூபா பெறுமதியான பொருட்கள் இங்கிருந்து கடத்திச் செல்லும் போதும் கைப்பற்றப்பட்டது.

சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதியான இந்திய ஜவுளிகள் கடத்திவரும்சமயம் கைப்பற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்

இந் நாட்டுக்கு கடத்திவரப்பட்டபோது கைப்பற்றப்பட்ட சாமான்களின் விபரத்தையும் அவர் தெரிவித்தார். அவை வருமாறு:

| | |
|---|---|
| 0 இந்தியன் ஜவுளிகள் | ரூ.2,165,589 |
| 0 பீடி இலைகள் | ரூ 260,069 |
| 0 மிளகாய் | ரூ.418,842 |
| 0 அலங்காரப்பொருள் | ரூ.21,175 |
| 0 பூடு | ரூ 106,000 |
| 0 டோர்ச் பல்ப்ஸ் | ரூ.10,600 |
| 0 ரேடியோக்கள் | ரூ.42,009 |
| 0 பெற்றோல்மாக்ஸ் பாகம் | ரூ.29, 76 |
| 0 சல்லடை | ரூ.85,605 |
| 0 தங்கம் | ரூ. 89,870 |

நகைகள், கடிகாரங்கள், அபின், நகைக்கடைக்குரிய வாள்கள் போன்ற பொருட்க

[8-ம் பக்கம் பார்க்க]

## $1\frac{1}{4}$ லட்சம் ஜவுளி ஆலை ஊழியர்கள் வேலைநிறுத்தம்

[சென்னை, பெப். 11 தமிழ் நாட்டில் சுமார் ஒன்றேகால் லட்சம் ஜவுளி ஆலைத் தொழிலாளர்கள் கடந்த இரவு முதல் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

208 ஜவுளி ஆலைகளைச் சேர்ந்த ஊழியர்கள் சம்பள உயர்வு கோரி இந்த வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

கோயம்புத்தூரில் 85 ஜவுளி ஆலைகளில் ஓரிரு ஆலைகள் தவிர மற்ற எல்லா இடங்களிலும் வேலைநிறுத்தம் நடைபெறுகிறது.

தி. மு. க., இந்திய தேசிய தொழிற்சங்கம் ஆகிய இரு தொழிற் சங்கங்களைத் தவிர்த்த மற்ற எல்லா தொழிற் சங்க ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளனர். இந்த இரு தொழிற் சங்கங்களைச் சேர்ந்த ஊழியர்களும் சில இடங்களில் வேலை நிறுத்தம் செய்கின்றனர்.

வேலை நிறுத்தக்காரர்களின் கோரிக்கைகள் மீது விசாரணை செய்வதற்காக தனிநபர் தொழிற் கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலை நிறுத்தம் முழு அளவில் மிக அமைதியாக நடைபெற்று வருவதாக அறிவிக்கப்படுகிறது. [ஈ]

## துக்கதினத்திற்கு இளைஞர் பேரவை ஆதரவு

(யாழ்ப்பாணம், சனி) வடக்குக் கிழக்கு மாகாணத்தில் இம்மாதம் 9-ம் தேதி தமிழர் கூட்டணி நடத்தும் துக்கதின அனுஷ்டிப்புக்கு பூரண ஆதரவு அளிக்க தமிழ் இளைஞர் பேரவை முடிவு செய்துள்ளது.

தமிழ் ஆராய்ச்சி மாநாட்டு பரிசளிப்பு விழாவன்று மரணமானவர்களுக்கு அனுதாபம் தெரிவிப்பதற்காக, 9-ம் தேதி துக்கதினம் அனுஷ்டிக்குமாறு தமிழர் கூட்டணி வேண்டுகோள் விடுத்திருந்தது.

நேற்று யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ் இளைஞர் பேரவைப் பொதுக் கூட்டத்தில் தமிழர் கூட்டணியினரின் வேண்டுகோளை ஏற்று, துக்கதின அனுஷ்டிப்புக்கு ஆதரவளிப்பதென முடிவு செய்யப்பட்டது.

திரு. பொன் முத்துலிங்கம் தலைமையில் தமிழ் இளைஞர் பேரவை பொதுச்சபைக் கூட்டம் நடைபெற்றது. (க)

## பஸ், ரயில் கட்டணங்கள் திங்கள் முதல் அதிகரிப்பு

### ஒரு ரூபாவுக்கு மேலுள்ள டிக்கட்டுகள் இரு மடங்கால் உயர்வு

கொழும்பு, சனி பஸ் கட்டண அதிகரிப்பு வருகிற திங்கட்கிழமை முதல் அமுலுக்கு வரவிருக்கிறது.

இனிமேல் குறைந்த பட்சக் கட்டணம் 20 சதமாக இருக்கும். இப்போது 10 சதமாக இருந்து வருகிறது. தற்போது 15 சதமாக இருக்கும் கட்டணம் திங்கள்முதல் 25 சதமாக அதிகரிக்கப்படுகிறது. தற்போது 20 சதமாக இருக்கும் கட்டணம் இனிமேல் 30 சதமாகவும், தற்போது 30 சதமாக இருக்கும் கட்டணம் 40 சதமாகவும், 35 சத டிக்கட் 50 சதமாகவும், 40 சத டிக்கட் 60 சதமாகவும், 45 சத டிக்கட் 70 சதமாகவும், 50 சத டிக்கட் 80 சதமாகவும், 55 சத டிக்கட் 90 சதமாகவும் அதிகரிக்கும்.

தற்போது 60 சதத்துக்கு மேல் இருக்கும் கட்டணம் அனைத்தும் ஒரு ரூபாவாக அதிகரிக்கப்படுகிறது.

அத்துடன் தற்போது ஒரு ரூபாவுக்கு மேல் உள்ள கட்டணம் அனைத்தும் பெரும்பாலும் இரட்டிப்பு கட்டணமாக திங்கள் முதல் அதிகரிக்கப்படும்.

உதாரணமாக கொழும்பிலிருந்து காலிக்கு தற்போது அறவிடப்படும் 2 ரூபா 35 சத [illegible] 30 சதமாக அதிகரிக்கப்படும். இதே போல கொழும்பிலிருந்து அனுராதபுரத்துக்கு தற்போது அறவிடப்படும் 4 ரூ. 10 சத கட்டணம் 7 ரூபா 65 சதமாக அதிகரிக்கப்படும்.

ரயில் கட்டணங்களும் நாளை முதல் அதிகரிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. ரயில், பஸ் கட்டண அதிகரிப்பு சம்பந்தமான கசெட் அறிவிப்பு நேற்று நள்ளிரவு வெளியிடப்படுமென எதிர்பார்க்கப்பட்டது.

#### இலவச பயணம் ரத்து

இ. போ. ச. ஊழியர்களுக்கு இதுவரை அளிக்கப்பட்டு வந்த இலவச பயண முறையும் இம்மாதம் 4-ம் திகதியிலிருந்து ரத்துச்செய்யப்படுகிறது. இவர்களுக்கு மாதாந்த பருவகால சீட்டுமுறை அமுல்படுத்தப்படும்.

அத்துடன் மாணவர்களுக்கான சீசன் டிக்கட்டுகளுக்கு அளிக்கப்பட்டுவந்த 50 சதவீத கழிவு தொடர்ந்து இருக்கும். 5 நாள் வேலைக்குக் இர

(8-ம் பக்கம் பார்க்க

## கிரிக்கெட்

### இந்தியா — 225

### ஜெகநாதன் 4:30

[கண்டி, வெள்ளி] இந்தியக் கிரிக்கெட் கோஷ்டிக்கும், இலங்கை கிரிக்கெட் சபை தலைவர் கோஷ்டிக்குமிடையில் கண்டியில் நடைபெற்று வரும் 3 நாள் போட்டியின் முதலாவது நாளான இன்று இந்தியக் கோஷ்டி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 225 ஓட்டங்களைப் பெற்றது.

ஸ்ரீதரன் ஜெகநாதன் 30 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளையும், டேவிட் ஹெயின் 54 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்

## 7 மணிக்கு முன் பாண்

[யாழ்ப்பாணம், சனி] யாழ். நகரில் உள்ள சகல பேக்கரிகளும் காலை 7 மணிக்கு முன்னர் பாணைத்தயாரித்து விடவேண்டும் என்று அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா சகல பேக்கரி உரிமையாளர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார். [ஈ]

## 8-ம் திகதி பாடசாலை பகிஷ்கரிப்பு

### இளைஞர் பேரவை தீர்மானம்

யாழ்ப்பாணம், சனி வடக்குக் கிழக்கு மாகாணங்களில் இம்மாதம் 8ந் தேதி பாடசாலைகளில் பகிஷ்கரிப்பை நடத்தத் தமிழ் இளைஞர் பேரவை முடிவுசெய்துள்ளது.

இளைஞர் பேரவைப் பொதுச் செயலாளர் திரு சி. புஷ்பராசா வெளியிட்ட அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

தமிழர்கள் தங்கள் மொழி, கலை, கலாச்சாரம் சம்பந்தமாக அரசியல் கலப்பற்றமுறையில் சர்வதேச ரீதியில் யாழ்ப்பாணத்தில் தமிழாராய்ச்சி மாநாட்டை நடத்தினார்கள். தொடர்ச்சியாக ஏழு நாட்கள் நடைபெற்ற இம்மாநாட்டில் பங்குபற்றிச் சிறப்பித்த மக்கள் பண்பாகவும் ஒழுங்காகவும் நடந்துகொண்டு தம்மினத்தின் பண்பைக் காட்டினார்கள். அவர்கள் வெளிநாட்டிலிருந்துவந்த அறிஞர்

[8-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறு விளம்பரம்

### வைத்தியம்

ஹோமியோபதி டாக்டர் பயிற்சி, மருந்து, இவைகளை யொன்ற தங்கள் சகலதேவைக்கும், பலவருடங்களாக இலங்கை மக்களின் சேவையில் இயங்கிவரும் எங்களுடன் தொடர்பு கொள்ளுங்கள். National Institute of Homoeopathy 184/A நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 155

ஹோமியோபதி-சித்த ஆயுர்வேத டாக்டர்களுக்கும், மாணவர்களுக்கும் தபால்மூலம் பயின்றவர்களுக்கும் விசேட நேர்முகப்பயிற்சி வகுப்புகள் சனி, ஞாயிறு நடைபெறுகிறது. நேரில்வரவும். 74, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம். 919

### கல்வி

ஜி. சி. ஈ. 1974 ஆங்கில இலக்கியம், இலக்கணம் (Emma, Jungle Tide, Macbeth, English Prose) ஆங்கிலப் பேச்சு (Spoken English) வீடுகளில் வந்து கற்றுக் கொடுக்கப்படும். இங்கிலிஷ் ஜோசப் ஜுனிற். விளம்பர இல: 164 ஈழநாடு கேதுவர் வீதி, யாழ்ப்பாணம். 164

### தேவை

ஓய்வுபெற்றகாஷியர் உடன் தேவை. தெல்லிப்பழையில் வசிப்பவர் விரும்பத்தக்கது. தாசன் ஸ்ருடியோ, தெல்லிப்பளை. 923

நல்ல அனுபவமுள்ள லேத்மன் உடனடியாகத் தேவை. எலெக்ரிக்கல் வெல்டிங் அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது. எம். எச். எம். நசீம் பிறதர்ஸ், ஹமீதியா அரிசி ஆலை, மன்னார். 929

யாழ் நகரில் ஆரம்பிக்க இருக்கும் ஒரு நகர பாதுகாவலர் ஸ்தாபனத்துக்கு (Security Service) பிணைப் பணம் கட்டக்கூடிய மேற்பார்வையாளர், பணம் சேகரிப்போர், நகர் காவலர்கள் (வாட்) தேவை. 15-2-74க்கு முன் விண்ணப்பிக்கவும். J. B. செக்கூரிட்டி சேவிஸ், 154, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 936

நீர் இறைக்கும் இயந்திரங்கள் திருத்தக் கூடியவரும் சைக்கிள் பூட்டக்கூடியவருமான திறமை வாய்ந்த அனுபவமுள்ள ஒரு நபர் உடனே தேவை. நேர்மையைக் குறித்த நற்சான்றுப் பத்திரங்களுடன் கடித மூலம் விண்ணப்பிக்கவும். சிலோன் மேர்சன்ஸ் லிமிட், 484, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 934

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் வீடுடன் நான்கு இலாச்சகாணிக்கு ரூபாய் 7000/- ஈட்டுக்குத் தேவை. பிராஜ்மல் என்ரப்பிறைசஸ், உதயன் முத்து மாளிகை, 218/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 171

### விற்பனைக்கு

ஒரு வருடம் பாவித்த புதிய ரேலிமாஸ்ரர் ஸ்பேசட்ஸ் சயிக்கிள் உடன் விற்பனைக்குண்டு. 141, பருத்தித்துறை றோட், நல்லூர், யாழ்ப்பாணம். 930

### இலவசம்

ஜி.சி.ஈ. (சாதாரண/உயர் தரங்களுக்கு) வர்த்தக, கலை, விஞ்ஞான பாடங்களைப் போதிக்கும் "தொழிலாளர் பெஸ்ட்" இன்ஸ்டிரியூட்டார் பலன்டரியை வழங்குகிறார்கள். முத்திரையிட்ட அஞ்சல் உறையை 70, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணத்திற்கு அனுப்பவும். 194

### விற்பனைக்கு

உயர்ந்தரக மரவள்ளித் தடிகள், மிளகாய் நாற்றுகள், வாழைக்குட்டிகள் விற்பனைக்குண்டு. குறைந்த விலை, லேடன் பாம், கோப்பாய். தொலைபேசி: 330. 933

மருதனாமடத்தில் இருந்து மானிப்பாய் போகும் றோட்டில் முதலாம் கட்டைக்கு சமீபத்தில், ஆலடி என்னும் இடத்தில் 14 பரப்புக் காணி முழுதாகவோ, பகுதியாகவோ விற்பனைக்குண்டு. விபரங்கள் நேரில் அறிந்துகொள்ளலாம். மு. நமசிவாயம், இளைப்பாறிய ஆசிரியர், மக்வம், உடுவில். 938

நல்லூர் புதுச்செம்மணி வீதி வெளாதோப்பில் நவீன வசதிகளுடன் கூடிய வீட்டுடன் இரண்டரைப் பரப்புக் காணி விற்கப்படும். தென்னை, மா முதலிய பிரயோசனங்களுண்டு. எம். எஸ். பாலசுப்பிரமணியம், வேளாதோப்பு, செம்மணி வீதி, யாழ்ப்பாணம். 940

### வாடகைக்கு

யாழ் நகரில்-மத்திய ஸ்தாபனங்களின் அண்மையில் தங்க அறைகள் ஆண்களுக்கு மட்டும் உண்டு. நியாயமான சலார். உணவு வசதிகள் தேவைக்கேற்றபடி விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 927, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 927

EDUCATION
Special English classes
T. T. Jayaratnam, Education Bureau, Tellippalai. 937

## வெற்றுச்சாக்கு கேள்விப் பத்திரம்

வேலணை ப. நோ. கூ. சங்கத்திற்கு பத்தாயிரத்திற்கு மேற்பட்ட வெற்றுச்சாக்குகள் கேள்விப்பத்திரங்கள் மூலம் விற்பனைக்கு உள்ளன. கொள்வனவு செய்ய விரும்புவோர் ரூபா 25/- கேள்விப்பணமாக கட்டி கேள்வி விண்ணப்பப் பத்திரம்பெற்றுக்கொள்ளலாம். மேலும் விபரங்களை அறிய விரும்புவோர் சங்க அலுவலக நேரத்தில் சங்க அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம். தெரிவு செய்யப்படும் கேள்விப்பத்திரகாரர் ரூபா 300/- பிணைப்பணமாக உடனடியாகக் கட்டுவதுடன் மூன்று நாட்களுக்குள் முழுச் சாக்குகளுக்குரிய பணத்தைக் கட்டி பெற்றுக்கொள்ள வேண்டும். கேள்விப்பத்திர முடிவுத் திகதி 8-2-74.

பொது முகாமையாளர். 173

## கிராமசேவகருக்கு பாராட்டு

கொக்குவில், வெள்ளி

பண்டாரநாயக்கா ஞாபக இனத்தின்று கொக்குவில் பகுதியிலுள்ள நந்தாவில் குளத்தை சிரமதானம் மூலம் புனருத்தாரணம் செய்தவர்களுக்கு மாவு வழங்கியமைக்காகவும், தமது பகுதியான கொக்குவில் கிழக்குடன் மற்றும் கோண்டாவில் கொக்குவில் மேற்கு ஆகியகிராமசேவர்களின் பிரிவுகளிலும் கூப்பன் பதிதல் கூப்பன் வழங்குதல் அடையாள அட்டைப் படம் எடுத்தல் ஆகியவேலைகளை துரிதமாகச் செய்து முடித்ததற்கும் கொக்குவில் கிழக்கு கிராமசேவகர் திரு. குமாரசாமி கு கொக்குவில் ஐந்தாம் வட்டார மக்கள் குழுக் கூட்டத்தில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. (அ)

## டெலிபோன் இணைப்பு கிடைக்கும்

உடுப்பிட்டி, வெள்ளி

வல்வெட்டி, சாளம்பை ஆகிய இரு உப-தபாற்கந்தோர்களுக்கும் தொலைபேசித் தொடர்பு வழங்கத் தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சர் திரு. செ. குமாரசூரியர் உத்தரவிட்டுள்ளார். எதிர் வரும் 16ந் திகதி பிற்பகல் இவ்விரு உப-தபாற்கந்தோர்களுக்கும் யாழ்ப்பாண மாவட்டத் தபால் அத்தியட்சகரினால் தொலைபேசித் தொடர்பு திறந்துவைக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. உடுப்பிட்டித்தொகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு. ஜே. ரி. இராஜலிங்கம் இதுசம்பந்தமாக அமைச்சருடன் தொடர்புகொண்டிருந்தார். (அ)

பிரிட்டிஷ் நிர்வாகப்

## பயிற்சி பெறும் இலங்கைத் தம்பதிகள்

(லண்டன், பெப். 1)

லண்டனிலுள் பிரிட்டனில் வேலைவாய்ப்பு இலாகா அளிக்கும் நிர்வாகப் பயிற்சித் திட்டத்தில் இலங்கையைச் சேர்ந்த தம்பதியினரும் பங்குபற்றிவருகின்றனர். மொரட்டுவையில் வதியும் திரு. டெனிஸ் பரூன்டோவும் அவரது மனைவியான திருகாம்பிகையும் தான் இந்தத் தம்பதிகளாவர்.

இவர்கள் இருவரும் இலங்கையில் உதவித் தொழில் கமிஷனர்களாகப் பணியாற்றுகிறார்கள். இவர்களிருவரும் 13 அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளைச் சேர்ந்த தொழில் அதிகாரிகளுடன் இணைந்து இப்பயிற்சித் திட்டத்தில் பங்குபற்றி வருகின்றனர். கொழும்புத் திட்டத்தின் கீழ் பிரிட்டனின் வெளிநாட்டு அபிவிருத்தி நிர்வாகம் இத்திட்டத்தை ஒழுங்கு செய்துள்ளது. [அ]

## மேலதிக மா வேண்டுமாம்

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை போசனசாலைக்கு வழங்கப்படும் கோதுமை மா போதாதென்றும், கூடுதல் மா வழங்குமாறும் யாழ். உணவுக் கட்டுப்பாட்டதிகாரியைச் சந்தித்து மேற்படி போசன சாலை நிர்வாகத் தூதுகோஷ்டி ஒன்று வற்புறுத்தியுள்ளது.

3—2—74
## ஈழநாடு
வாரமலர்

0 தமிழ்மேல் காதல் கொண்ட கனடா காரிகை.
0 கப்பலோட்டிய தமிழர்கள்.
0 ஆடம்பர உடை வேண்டாம்.
0 அண்ணு என்ற மூன்றெழுத்து.
0 மூச்சுக் கோளாறுடன் பிறந்தால் பிழைக்குமா?
0 ஹொங்கொங் அழிந்துவிட்டதே!
0 யுங்டயர்த்தியில் நான்.

இன்னும் பல சுவையான அம்சங்களுடன் வெளிவருகிறது.

உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்!

## ஒரே இரவில் மூன்று இடங்களில் கொள்ளை

மீசாலை, வெள்ளி

ஒரே இரவில் மூன்று இடங்களில் கொள்ளைக் கூட்டம் தமது கைவரிசையைக் காட்டியுள்ளது. சாவகச்சேரியைச் சேர்ந்த கல்வயல் பகுதியில் இது நடைபெற்றுள்ளது.

இரு கடைகளிலும், ஓர் இளம் குடும்பத்தின் வீட்டிலும் கொள்ளைக் கூட்டத்தினர் கைவரிசை காட்டினர். கல்வயல் சங்கக்கடை ஒன்றில் திருடர் கதவை அலவாங்கினால் புரட்ட முயற்சித்தவேளையில் காவற்காரரின் அசமாற்றத்தால் சம்பிரீட்டிய கொள்ளைக்கூட்டம் மட்டுவில் மகாவித்தியாலயத்திற்கும் பக்கத்திலுள்ள தனியார் கடையொன்றில் சில பொருட்களைத் திருட வாய்ப்பளித்தது. இவ்விடத்தில் இரவு 3 மணியளவில் சென்றவர்கள் பாவித்த அலவாங்கையும் விட்டுப்போயுள்ளனர். சங்கக்கடைகளுக்கும் தனியார் கடைகளுக்கும் ஒரே அலவாங்கைப் பாவித்திருக்கலாமென்று சில அடையாளங்கொண்டு அறியப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது.

முகமூடி அணிந்த கோஷ்டியொன்று அதே இரவு இளம் குடும்பம் ஒன்றின் வீட்டில் சென்று கத்தியைக் காட்டி நகை, உடுப்பு முதலியவற்றைக் அபகரித்துச் சென்றதாகச் சொல்லப்பட்டது. பொலிஸார் விசாரணை செய்கின்றனர்.

## கஷ்டமின்றி முன்னேற்றமில்லை

உடுப்பிட்டி, வெள்ளி

"கஷ்டப்படாமல் நாம் ஒருபோதும் முன்னேறமுடியாது. தற்போதைய பொருளாதாரக் கஷ்டம் நாட்டு மக்களிடம் சுய உணவுற்பத்தியை ஊக்குவித்துள்ளது. படித்த வாலிபர்கள் மட்டுமல்ல, அரசாங்க உத்தியோகத்தர்களும் கூட விவசாயத்தில் தீவிரமாக இறங்கியுள்ளனர். மக்கள் அரசாங்கம் பதவிக்கு வந்தபின்னரே விவசாயிகளுக்கும் நாட்டில் முதலிடம் கிடைத்துள்ளது."

இவ்வாறு புலோலி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வாலிப முன்னணியின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு. கே. ரி. இராஜசிங்கம் கூறினார்.

வாலிப முன்னணித் தலைவராக திரு. ஏ. கே. சூரியமூர்த்தியும், செயலாளராக திரு. க. ஞானப்பிரகாசமும், பொருளாளராக திரு. வி. ஸ்ரீஸ்கந்தராசாவும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## இன்றைய பலன்

(தை மீ 20-ந் திகதி)
(2-2-74)

ஜோதிடக் கலாநிதி
[illegible]

மேஷம்: மனதில் விரக்தி நிலை தென்படும். உடல் நலமும் பாதிக்கப்படலாம். கால் நடைகளிலும் நஷ்டமேற்படும்.

ரிஷபம்: மேலிடத்தின் செல்வாக்கும் பாதிக்கப்படலாம். அயலவர்களுடன் அன்புடன் நடந்துகொள்ளவும்.

மிதுனம்: கனவான நினைவுகள் தலைதூக்கும். காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு. சுபதினம்.

கடகம்: சிறிவரும் கோபம் பெரிய மோதல்களை ஏற்படுத்தும். எதிரிகளின் சூழ்ச்சிகளும் பலமாக இருக்கும்.

சிம்மம்: செல்வாக்கும் படைத்தவர்களின் ஆதரவு கிடைக்கும். செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும்.

கன்னி: புதியவர் ஒருவரின் தொடர்பு உங்களுக்குப் புதுப் பாதையைக் காட்டும். அறவழியில் நாட்டத்திற்கு இடமுண்டு.

துலாம்: கருடப் பார்வை உங்களை வட்டமிடும். முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விஷமிகள் திட்டம்போடுவார்கள்.

விருச்சிகம்: அறிஞர்களின் வருகை உங்களை உற்சாகப்படுத்தும். களஸ்திர வழியாலும் காரியம் சேரும்.

தனுசு: வெளியிடத்துத் தொடர்புகளில் மந்த நிலை தென்படும். தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கலாம்.

மகரம்: ஸ்தல யாத்திரை ஒன்று மேற்கொள்ளப்படலாம். நினைத்ததைச் சாதிப்பதில் இன்று முன்னிலையில் நிற்பீர்கள்.

கும்பம்: வெற்றிப் பாதையில் வீறுநடை போடுவீர்கள். தொழில் துறையில் புதிய உற்சாகம் பிறக்கும்.

மீனம்: புதிய கோணத்தி லிருந்து பொருள் வரவுக்கு இடமுண்டு. துணிவையே துணையெனக்கொண்டு காரியங்களைச் சிறப்பாகச் செய்வீர்கள்.

## தந்தி, மணிஓடருக்கு என்ன நடந்தது?

வல்வெட்டித்துறை, வெள்ளி

தந்தி மணி ஓடரில் அனுப்பப்பட்ட பணம் விலாசதாரருக்குக் கிடைக்கவில்லை.

வல்வெட்டித்துறைத் தபால் நிலையத்தில் கடந்த சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு திரு. வேலும்மயிலும் என்பவரால் திரு. கோபாலசாமி, மீதோட்டம், வெல்லாவெளி என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட்ட 130 ரூபா தந்தி மணி ஓடருக்கே இக்கதி நேர்ந்துள்ளதாக அதனை அனுப்பியவர் தெரிவித்தார். பிறகு அவர் தமது பிள்ளைகளுக்கு வைத்தியச் செலவுக்கு அனுப்பப்பட்ட பணத்திற்கு இக்கதி ஏற்பட்டமைதயிட்டு மனவேதனையடைந்துள்ளார். இது குறித்து அதன் பிரதி ஒன்றினையாவது மறுபடியும் அனுப்பிவைக்குமாறு வல்வெட்டித்துறைத் தபால் அதிபரைத் தாம் கேட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

## பிரதிஷ்டா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், சனி

மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் விநாயகப் பெருமானுக்கும் சுப்பிரமணியப் பெருமானுக்கும் அமைக்கப்பட்ட புதிய கோவிலின் புநராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் நடைபெறவிருக்கிறது. (அ)

## வேதம் ஓதச் செல்லும் மாணவர்கள்

(மாவிட்டபுரம், வெள்ளி)

சிலாபத்தில் நடைபெறும் மகாகும்பாபிஷேக விழாவில் சுன்னாகம் சதாசிவபிராசீன பாடசாலை அதிபர், மாணவர்கள் ஆகியோர் வேதபாராயணர்களாகப் பங்குகொள்ள இருக்கின்றார்கள்.

சிலாபம் உடப்பு பார்த்தசாரதி சுவாமி திரௌபதியம்பாள் ஆலய மகாகும்பாபிஷேக விழா பெப்ரவரி மாதம் 6-ம் திகதி அதிவிமரிசையாக நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் சுன்னாகம் சதாசிவ பிராசீன பாடசாலை அதிபர் திரு. தா. மகாதேவசர்மாவும், மாணவர்கள் கு. சோமசுந்தரசர்மா, பரமேஸ்வரசர்மா, ஜகந்நாதசர்மா ஆகியோர் வேதபாராயணர்களாகப் பங்குபற்றுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலுக்கெதிரான போர்ஆயத்த நிலையைக் கைவிட எகிப்திய அதிபர் கடும் நிபந்தனை!

## மாஸ்கோவில் இந்திய சுதந்திர தினக் கூட்டம்

(மாஸ்கோ, பெப். 1) இங்கு நடைபெற்ற இந்திய சுதந்திர தினக் கூட்டமொன்றில் இந்தியாவுக்கு மேலும் வெற்றிகள் கிட்டவேண்டும் என்று வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

கூட்டத்தின் தலைமைக்குழுவில் அவ்நாட்டு அமைச்சர் ஆந்திரி குரோமிகோவும், சோவியத் பாராளுமன்றத்தின் உபதலைவர் மிகாயில் யஸ்ரேவும், இந்தியத் தூதர் கே. ஷெல்வங்காரும் அங்கம் வகித்தனர்.

சோவியத் நட்புறவுச் சங்கங்கள் யூனியன் தலைவி திரு வொப்போவா அம்மையார், இரு நாடுகளுக்கிடையான நட்பை சோவியத் மக்கள் பெரிதும் மதிப்பதாகக் கூறினார்.

கலோனியல் ஆட்சியை எதிர்த்து இந்திய மக்கள் சுதந்திரத்திற்காக போராடிக்கொண்டிருந்தபோதும் சோவியத் மக்களின் அனுதாபம் இந்தியாவின் பால் இருந்தது என்று சோவியத்-இந்திய கலாச்சார கழகத்தின் உபதலைவர், சுகாதார அமைச்சர் பேராசிரியர் போரிஸ் பெட்ரோவ்ஸ்கி கூறினார். உலக சமாதானத்தை பலப்படுத்துவதிலும் ஏகாதிபத்திய சூழ்ச்சிகளை முறியடிப்பதிலும் இந்தியா முன்னணியில் நின்று செயலாற்றுவதாக அவர் கூறினார்.

ஆரவாரமான வரவேற்புக் கிடையில் பேசிய இந்திய தூதர் கே. ஷெல்வங்கார் சோவியத் தலைவர் பிரெஷ்னேவின் சமீபத்திய இந்திய விஜயம் மிக முக்கியமானதென்றும் குறிப்பிட்டார்.

## "பிடித்த பகுதிகளை விடவேண்டும்; பாலஸ்தீனப் பிரச்னை தீரவேண்டும்"

நியூயோர்க், பெப். 1 இஸ்ரேலுடனான போர் ஆயத்தநிலையைக் கைவிடுவதற்கு எகிப்திய அதிபர் அன்வர் சதாத் இரு முக்கிய நிபந்தனைகளை வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேலுடன் படைவிலகல் சம்பந்தமாக எகிப்தியர் செய்துகொண்ட உடன்பாடு குறித்தும் ஜெனிவா அமைதி மகாநாட்டில் பாலஸ்தீன மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொள்வது தொடர்பாகவும் அதிபர் சதாத்துடன் ஆலோசனைகள் நடத்துவதற்காக பாலஸ்தீன விடுதலை இயக்க தூதுகோஷ்டியொன்று அல்பத்தாஹ் தலைவர் யாஹர் அரபாத் தலைமையில் கெய்ரோ வந்துள்ளது.

இந்தத் தூதுகோஷ்டியினரிடம் பேசுகையிலேயே அதிபர் சதாத் இந்த இரு நிபந்தனைகளையும் வெளியிட்டிருக்கிறார். இஸ்ரேலியர் கைப்பற்றியுள்ள சகல அரபுநிலங்களிலிருந்தும் வெளியேறவேண்டும். பாலஸ்தீனமக்களின் உரிமைப்பிரச்னைகள் தீர்க்கப்படவேண்டும். இந்த இரு பிரச்னைகளும் தீர்க்கப்படாதவரையில் இஸ்ரேலுக்கெதிரான போர் ஆயத்த நிலைமை எகிப்தவிலக்கிக்கொள்ளமாட்டாது என்று அதிபர் சதாத் தெரிவித்துள்ளார்.

### 3-வது படை திரும்புகிறது

இஸ்ரேலுக்கும் எகிப்துக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட படைவிலகல் ஒப்பந்தம் முறையாகச் செயல்பட்டு வருவதைத் தொடர்ந்து சைனாய் பாலைவனப் பகுதியில் இஸ்ரேலியரால் முற்றுகையிடப்பட்டு தொடர்பற்றிருந்த எகிப்தியரின் 3-வது படையினர் கெய்ரோ திரும்பிக்கொண்டிருக்கிறார்கள். இதுவரை இரண்டாயிரம் படையினர் கெய்ரோ வந்துள்ளனர். தாயகம் திரும்பியுள்ள இப் படையினருக்கு மக்கள் உற்சாகமாக வரவேற்பளித்துள்ளனர்.

### எண்ணெய் தடை நீடிக்கும்?

அமெரிக்கருக்கு எதிராக எண்ணெய் உற்பத்தி நாடுகள் பின்பற்றிவரும் எண்ணெய் விற்பனை தடை முடிவுக்குக் கொண்டுவரப்படும் என்று அமெரிக்க அதிகாரிகள் எதிர்பார்க்கும் அதேசமயம் இந்தத் தடை தொடர்ந்து அமுலில் இருந்துவரவே செய்யும் என்று அரபுத் தலைநகர்களிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

எண்ணெய் உற்பத்திக் குறைப்பையும் விற்பனைக் குறைப்பையும் இஸ்ரேலுடனான பிரச்னைகள் தீரும்வரை தொடர்ந்து செயல்படுத்த வேண்டும் என்று இந்த நாடுகள் கருதுகின்றனவாம். ஈராக்கு, லிபியாவும் இந்தக் கொள்கையைத் தீவிரமாக வற்புறுத்திவருவதாகத் தெரிகின்றது.

இதேசமயம் திரிப்போலியில் கூடும் எண்ணெய் உற்பத்தி நாடுகளின் மகாநாட்டின்போது அமெரிக்காவுக்கு எதிரான எண்ணெய் விற்பனைத் தடையை நீக்குவது பற்றி அந்த நாடுகள் முடிவுசெய்யக்கூடும் என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் டாக்டர் ஹென்றி கிஸிங்கர் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

## பாலையை சோலையாக்கும் மனிதன் வெட்டிய கடல்!

(மாஸ்கோ, பெப். 1) மனிதனால் படைக்கப்பட்ட கடல் ஒன்று, கராகும் பாலைவனத்தில் தோன்றியுள்ளது. அதன் ஊடாகச் செல்லும் கால்வாயில் கட்டப்பெற்றுள்ள நீர்த்தேக்கங்களில் இது நான்காவதாகும். கோபெத்தாக் நீர்த்தேக்கம் என்பது அதன் பெயர்.

கராகு கால்வாயின் மூலம் 4,00,000 ஹெக்டேர் நிலங்களுக்கு நீர் பாய்ச்சப்படுகிறது. அதன் மண்டலத்தில் பத்துக்கு மேற்பட்ட பருத்தி பயிரிடும் அரசுப் பண்ணைகளும், பல பழத்தோட்டங்களும், மூலிகைகளை வளர்க்கும் ஓர் அரசுப் பண்ணையும் உள்ளன. கராகும் நதியின் காரணமாக துருக்மீனியாவில் கடந்த பத்தாண்டுகளில் பருத்தி விளைச்சல் இரு மடங்குக்கு மேல் அதிகரித்துள்ளது.

கராகும் கால்வாய்த் திட்டம் பற்றிய செலவுகள் ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு திரும்பக் கிடைத்துவிட்டன. இந்தத் திட்டத்தைப் பயன்படுத்துவதால், சுமார் 100 கோடி ரூபிள் நிகர லாபம் கிடைக்கிறது. கராகும் கால்வாய் மேலும் வெட்டப்படுகிறது. மனிதனால் உருவாக்கப்படும் இந்த நதியின் நீளம் 1400 கிலோ மீட்டர் தூரம் கப்பல் பயணத்திற்கு ஏற்றதாகவிருக்கும்.

## போயிங் விபத்து 92பேர் மரணம்

நியூயோர், பெப். 1 பசுபிக்கில் பேகோபேகோ தீவில் அமெரிக்காவுக்குச் சொந்தமான போயிங் 707 விமானமொன்று விழுந்து விபத்துக்குள்ளானதில் 92 பேர் கொல்லப்பட்டுள்ளனர். உயிர் தப்பியுள்ள 9 பேரில்பலர் பலத்த காயங்களுக்குள்ளாகியுள்ளனராம்.

இந்த விமானத்தில் பிரயாணம் செய்தவர்களில் பலரும் நியுஸிலாந்தையும் மேற்கு சோமோவியையும் சேர்ந்தவர்களாம். நியுஸிலாந்திலிருந்து லொஸ்ஏஞ்சலஸ்நோக்கி இவ்விமானம் போய்க்கொண்டிருந்தபோதே இந்த விபத்து ஏற்பட்டது.

## அபிவிருத்தியடையும் நாடுகளுக்குதவும் பருத்தி ஆராய்ச்சி

லண்டன், பெப். 1] இலங்கை உட்பட அபிவிருத்தியடையும் நாடுகளுக்கு உதவக்கூடிய பருத்தி ஆராய்ச்சி தற்போது ஈதுவடோரில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. தொழில்நுட்ப உதவித் திட்டத்தின்கீழ் பிரிட்டனின் வெளிநாட்டு அபிவிருத்தி நிர்வாகம் இவ்வாராய்ச்சிக்கான நிதியுதவியை அளித்துவருகிறது.

பருத்தி மரங்களை இனவாரியாகப் பிரித்தெடுத்து அவ்வவ் வினங்களை அபிவிருத்தி செய்வதன்மூலம் பருத்தியின் தரத்தைக் குறிப்பிடத்தக்க அளவு உயர்த்தலாமென ஆராய்ச்சியாளர் திரு. ஜோன் மன்ரோ கண்டுபிடித்திருக்கிறார்.

பிரிட்டனின் வெளிநாட்டு அபிவிருத்தி நிர்வாகம் இந்தியாவிற்கு இரு பருத்திவளர்ப்பு நிபுணர்களை அனுப்பியிருக்கிறது. இந்தியாவின் பலதரப்பட்ட காலநிலைகளுக்கேற்ப அதிகபயன் தரக்கூடிய பருத்தி இனங்களை உற்பத்தி செய்வதில் இவ்விரு நிபுணர்களும் இந்திய அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவர்.

இவ்வாராய்ச்சியின் பலனாக இலங்கையும் பருத்திப்பெருவளர்ச்சியில் தீவிரமாக ஈடுபடக்கூடியதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. (அ)

## பிரி. அமைச்சரை பரிகாசம் செய்தனர்

லூசாக்கா, பெப். 1 சாம்பியாவுக்கு விஜயம்செய்துள்ள பிரிட்டிஷ் வெளிஉறவு அமைச்சர் சேர் அலெக் டாக்ளஸ் ஹியூம் நேற்று மாணவர்களால் லூசாக்காவில்வைத்து பரிகாசம் செய்யப்பட்டார்.

பிரிட்டனில் வெள்ளையர்கள் அல்லாதவர்களுக்கு விசாவழங்குவதற்கு கடைப்பிடிக்கப்படும் முறையை ஆட்சேபித்தே இளைஞர்கள் பிரிட்டிஷ் அமைச்சர் வந்தபோது கூச்சலிட்டு பரிகாசம் செய்தனர்.

ஒரு கட்டத்தில் பிரிட்டிஷ் அமைச்சருக்குமிக அருகிலேயே மாணவர் கோஷ்டியினர் சென்று கூச்சலிட்டனர். இச் சம்பவம்குறித்து சாம்பியா, வெளிநாட்டமைச்சர் சேர் அலெக்ஸ் டாக்ளஸ்ஹியூமிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டது.

## பிரான்ஸின் சர்வதேசக்கடன்

பாரிஸ், பெப். 1 பிரான்ஸ் மிகப்பெருந்தொகையில் சர்வதேசக்கடன் ஒன்றை எழுப்பவிருக்கின்றது. எண்ணெய் நெருக்கடியால் ஏற்பட்டுள்ள நிலைமையைச் சமாளிப்பதற்காகவே இந்தக் கடனை பிரான்ஸ் எழுப்பவிருக்கின்றது. 150 கோடி பவுண் மதிப்புள்ள இக்கடன் சர்வதேச அடிப்படையில் எழுப்பப்படுமாம்.

## சிங்கப்பூரில் பயங்கரவாதிகள்
# எண்ணெய்த் தாங்கிக்கு வெடி வைத்து அட்டகாசம்!

சிங்கப்பூர், பெப். 1 சிங்கப்பூரிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமொன்றில் எண்ணெய் தாங்கி ஒன்றுக்கு வெடி வைத்த பயங்கரவாதிகளின் கோஷ்டி ஒன்று அந்த நிறுவனத்துக்குச் சொந்தமான படகு ஒன்றைக் கடத்திக்கொண்டு கடலுக்குச்சென்றுவிட்டது.

இன்று காலைவரை கிடைத்த செய்திகளின் படி பயங்கரவாதிகள் நால்வரும் இன்னமும் அந்தப்படகிலேயே இருந்துவருகிறார்கள். ஆனால் அப்படகில் பயங்கரவாதிகளால் பணயமாகப் பிடித்துவைக்கப்பட்டிருந்த ஆறு பேரில் இருவர் சாதுர்யமாகத் தப்பிவிட்டனர்.

நால்வர் பத்திரமாகத் தப்பிச் செல்ல வசதிசெய்யவேண்டும் என்றும் இன்றேல் படகுக்கு வெடிவைத்துத் தகர்க்கப் போவதாகவும் அதன் மூலம் பணயமாக உள்ளவர்களையும் கொன்று தாங்களும் சாகப்போவதாகவும் அவர்கள் பயமுறுத்தியுள்ளனர்.

இந்தப் பயங்கரவாதிகளில் இருவர் ஜப்பானியர் என்றும் ஒருவர் அராபியர் என்றும் கூறப்படுகின்றது.

சிங்கப்பூரிலுள்ளஎண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனம் ஒன்றின் எண்ணெய் தாங்கி ஒன்றுக்கு நேற்று வெடிவைத்த இந்நபர்கள் ஆறு அதிகாரிகளையும் பிடித்துக்கொண்டு அந்த நிறுவனத்துக்குச் சொந்தமான படகு ஒன்றில் கடலுக்குத் தப்பிச்சென்றனர்.

சிங்கப்பூரின் கரைக்கு வெகு அருகாமையிலுள்ள பாலாவு போகோம் தீவில் உள்ள ஷெல் எண்ணெய் சுத்திகரிக்கும் நிறுவனமொன்றில் இச்சம்பவம் இடம்பெற்றது. இச்சம்பவத்தில் எவரும் காயமடையவில்லை. அதேசமயம் வெடி வைப்பினால் ஏற்பட்ட தீ விரைவாக அணைக்கப்பட்டது.

இந்தக் கோஷ்டியைச் சேர்ந்த மூவர் உடனடியாக ஒரு படகைக் கைப்பற்றி ஆறு பேரைப் பணயமாகப் பிடித்துக்கொண்டு கடலுக்குச்சென்றனர். அந்தப் படகை உடனடியாகவே பாதுகாப்புப் படையினர் வேறு படகுகளில் சென்று சுற்றி வளைத்துக்கொண்டனர். பொலிசார் தம்மை நெருங்கி வந்தால் அல்லது வேறு ஏதாவது முயற்சியில் ஈடுபட்டால் படகை வெடிவைத்துத் தகர்க்கப் போவதாக அவர்கள் பயமுறுத்தினர்.

சிங்கப்பூரிலிருந்து பத்திரமாகத் தப்பிச்செல்ல அனு[illegible] [illegible] கோரியுள்ளனர்.

# ஆமதாபாத்தில் அமைதி திரும்புகிறது

புதுடில்லி, பெப். 1 குஜராத் மாகாணத்தின் இப்பொழுது அமைதி திரும்பிக்கொண்டிருக்கின்றது.

ஆமதாபாத்தில் சமூக நிலைமை திரும்புவதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர். இங்கு ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்டுள்ளது.

கடைகள், காரியாலயங்கள் முதலியன மீண்டும் பல நகரங்களிலும் திறக்கப்பட்டுள்ளன. ஆனால் பாடசாலைகளும் கல்லூரிகளும் இன்னும் திறக்கப்படவில்லை.

ஜவாக்பூரில் நேற்று 100பேர் கைதுசெய்யப்பட்டனர்.

இங்கு இன்று ஆர்ப்பாட்டமொன்றைநடத்த மாணவர் இயக்கங்கள் அறிவித்தல் விடுத்ததைத் தொடர்ந்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். [illegible] விலைவாசி ஏற்றத்தையும், உணவுத் தட்டுப்பாட்டையும் எதிர்த்து வேலைநிறுத்தம் செய்துவரும் ஆசிரியர்களுக்கு ஆதரவாக மாணவர்கள் இன்று 'பந்த்' நடத்த திட்டமிட்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

நூறுதரம் கேட்டாலும் கொடுக்க மறுக்கும் ஒருகுழந்தை மற்றொருவருக்குக் கேட்டமாத்திரத்திலே கொடுத்துவிடலாம். அவ்விதமேதான் ஆண்டவனின் அருளும்.

அன்னை ஸ்ரீ சாரதாதேவி.

ஈழநாடு

(2 - 2 - 74)

# வடபகுதி விவசாயிகள்

'அரசாங்கத்தின் உணவு உற்பத்தித் திட்டத்திற்குச் செவிசாய்த்து, வடபகுதி மக்கள் உணவுற்பத்தியில் தன்னிறைவுகண்டு மிகுந்த வெற்றிபெற்றுள்ளனர். நாட்டின் சரித்திரத்தில் காணமுடியாத நெல்லுற்பத்தியைப்பெற்ற இவ்விவசாயிகளை அரசாங்கத்தின் சார்பில் பாராட்டுகின்றேன்'.

இவ்வாறு வடபகுதி அரசியல் விவசாய அதிகாரியும் நல்லூர் எம். பியுமான திரு. சி. அருளம்பலம் தெரிவித்திருக்கிறார். திரு. அருளம்பலத்தின் அரசியலுக்கு மாறுபட்ட மக்கள்கூட அவருடைய பாராட்டில் மகிழ்ச்சியடைவது நியாயமாகும்; அரிசி அருகிவிடும் யாழ்ப்பாணமாவட்ட மக்களுக்கு இது ஓர் ஆறுதலளிக்கும் செய்தி; வடபகுதி மக்கள் சரித்திரம் காணாத சாதனைகளிலும் வேதனைகளிலும் ஈடுபடுவது ஓர் அதிசயமான செய்தியல்ல; உலகறிந்த விஷயமுமிகூட.

வடபகுதி அரசியல் விவசாய அதிகாரியென்ற கோதாவில், இப்பகுதி மக்கள் அரசாங்கத்துக்கு உதவிய ஒத்துழைப்பே இவ்விவசாயச் சாதனையின் முக்கிய அம்சமாக அவர் குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளார்; அதன்விளைவாக அரசாங்க உணவு உற்பத்தித் திட்டத்துக்கு இவ்வெற்றியின் பெரும்பங்கு சாரும்; இதை ஆட்சேபிக்கப் பலர் தயங்கமாட்டார்கள்; அரசியல் விவசாய அதிகாரிகளின் சேவை எவ்வித நன்மையளித்தபோதும் அதற்கு எதிர்ப்பிருப்பதை நாமறிவோம்.

வடபகுதி விவசாயிகளின் வெற்றி பற்றி ஆராய்ச்சி நடத்துவது எமது நோக்கமல்ல; 'நெய்க்குத் தொன்னை ஆதாரமா அல்லது தொன்னைக்கு நெய் ஆதாரமா' என்ற வீண் விவாதங்களில் ஈடுபடுவது இந்த ஆக்கவேலைக்கு அவசியமற்றது; ஆனால் உயிர்ப் பிரச்னையாகிய உணவுப் பிரச்னைபற்றிய ஒத்துழைப்பு மிக முக்கியமானது அரசாங்கத்துக்கும் விவசாயிகளுக்கும் பரஸ்பர நம்பிக்கையும் ஒத்துழைப்பும் பூரணமாக வேண்டுமென்பது தெளிவு. இது வடபகுதிக்கு மட்டுமல்ல நாடுமுழுவதற்கும் இன்றியமையாத தேவை.

வடபகுதிக்கு சில கஷ்டங்கள் பிரத்தியேகமானவை; அரசியல் ரீதியில் அவற்றைப் பிரிவினை ஏற்படாமல் நடத்திக்கொள்வது அரசாங்கத்தின் பொறுப்பாகும். நெல்லுக்கும் மொழிக்கும் என்ன தொடர்பு என்று இன்னும் செய்வது அரசியல் அறியாமையாகும்; எடுத்ததற்கெல்லாம் அரசு எம்மைப் புறக்கணிக்கின்றதென்று இப்பகுதி மக்கள் கூச்சலிடும் பழக்கமும் இத்துறைக்குப் பங்கம் விளைக்கின்றது.

அரசியல் வேறுபாடுகள் என்னவென்றாலும், உணவு நெருக்கடியில், இருபகுதியினரும், விரும்பியோ விரும்பாமலோ ஒன்றுபடவேண்டும்; ஓரளவிற்கு ஒன்றுபட முடிந்ததால்தான் இன்று உற்பத்தியின் உச்சநிலையை அடைய முடிந்ததென்பதை நாம் அனைவரும் உணரவேண்டும்.

அரசியல்போட்டிகள் ஒருபுறமிருக்க, அரசாங்கம் விவசாயிகளைப் பயமுறுத்தி உற்பத்தியைப் பெருக்க முயற்சிப்பது ஒருபோதும் வெற்றியளிக்க மாட்டாது. நெற்கொள்வனவுச் சபைக்கு நெல்லை விற்கும் விவசாயிகளுக்கே, உரம், வருமான வரி விலக்கு போன்ற சலுகைகளும் வசதிகளும் வழங்கப்படவேண்டுமென்றபாகுபாடுகள உற்பத்திக்கு ஊக்கமளிக்கமாட்டா. புசலுக்கு 40 ரூபா கொடுத்து நெல்லை அரசாங்கம் கொள்வனவு செய்வது கள்ளமார்க்கட்டிற்கும், பதுக்கலுக்கும் ஆதரவு அளிக்கும் செயலாகும்.

நெல் கொள்வனவு சபைதனது முயற்சியில் வெற்றிகாணவேண்டும்; அதன் பயனைக மக்களின் பங்கீட்டுக்கு அதிகரிக்கப்படவேண்டும்; இதுநிறைவேற அரசாங்கம் வேண்டிய உதவிகளை அளிக்க முன்வரவேண்டும்; பயமுறுத்தும் தந்திரங்களைத் தற்காலிகமாக நிறுத்திவைக்கவேண்டும்.

வடபகுதி விவசாயிகளுக்குஒருவேண்டுகோள்: பசிப்பிணியை நீக்கப் பழமைபோல் பணப்பயிரில் அதிக கவனத்தைச் செலுத்தாமல் உணவுப்பயிரில் முழுக்கவனத்தையும் செலுத்துங்கள். தப்புவதற்கு இதுவே தகுந்த வழி.

# உணவுத் தட்டுப்பாட்டை ஒழிக்க இப்படி ஒரு வழி

மீசாலை, வெள்ளி

"தமது தேவைக்கு மிஞ்சி ஏராளமான நெல்லை வைத்திருக்கும் கமக்காரர் மற்றும் தம்மிடமுள்ள நெல்லை விற்கும் கமக்காரர் தங்களுக்குள் சங்கம் உண்டாக்கி அந்த நெல்லை வாங்கி வியாபாரிகள் தவிர்ந்த கஷ்டப்படும் ஏனையோருக்கு நியாயமான விலைக்கு விற்றால் நாட்டில் உணவுத் தட்டுப்பாட்டை ஒழிக்கலாம்."

தென்மராட்சி அபிவிருத்திச் சபைசெயலாளர் திரு. மு. கணபதிப்பிள்ளை தென்மராட்சி ஓய்வூதியம் பெறுவோர் சங்கமண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும் போது மேற்கண்டவாறு கூறினார். [அ]

## ஓரளவு கஷ்டம் குறைந்தது

வேலணை, வெள்ளி

வேலணை வங்களாவடி வரை இ. போ. சபை குறுகிய பஸ் சேவையை இடையிடையே நடத்திவருவதால் இங்கு பஸ்ஸுக்காகப் பிரயாணிகள் பலமணித்தியாலம் காத்திருக்க வேண்டிய நிலை ஓரளவு குறைந்துள்ளது. தொடர்ச்சியாக இச்சேவை நடைபெற்றால் பிரயாணிகளுக்கு வசதியாக இருக்கும் எனப் பேசிக்கொள்ளப்படுகிறது. (அ)

# சைவத் தமிழ்த்திரு நடேசன் புகழ்மாலை

தெள்ளத் தெளிந்த சிந்தனையால் தேனித் தலரும் நயமொழியால்
செல்வ முகத்துத் திருந்தொளியால் சீர்த்த சிறுபுன் முறுவலினல்
வெள்ளக் கலைத்தீஞ் சொற்பெருக்கால் மின்னும் வேகத் துடிப்பதனல்
விழைவார் அறிவன் பாசார மேதா விலாச விளக்கமதால்
உள்ளங் கால்தின் றுச்சிவரை ஒளிவு மறைவின் ஒருருபடித்தாய்
ஒளிருந் தமிழன் கலாசார உருவின் திருவால் நமதுளத்தை
அள்ளுந் திருவார் நடேசபிள்ளை அண்ணல் அவன்சீர் பாடுதுமே.
ஆலைச் செழுந்தீம் பாகுமொழி அமுதன் அவன்சீர் பாடுதுமே.

**வேறு**

நாட்டுக்கொருவன் நமக்கொருவன் நாவுத் தமிழுக் கொரேயொருவன்
பாட்டுக் கமைந்த பண்புடையார் பலருள் தலையாம் ஒரொருவன்
தீட்டுந் தமிழ்த்தீம் கவிப்பொருளைச் செவிசாய்த் திருந்து மனமுருகிக்
கேட்டுக் களிக்கும் நடேசபிள்ளை கேண்மைக் கொருவன் ஒருவனே.

சைவக் கலைஞன் தமிழ்க் கலைஞன் தத்துவ ஞானத் தனிக்கலைஞன்
மெய்மைத் தழைந்த அரசியலின் மேதா விகளுள் விழைகலைஞன்
தெய்வ ஞானச் செழுங்கலையைத் தெளிந்து வடித்துத் திருந்துமனம்
உய்யப் புகட்டும் நடேசபிள்ளை உண்மைக் கலைஞன் கலைஞனே.

**வேறு**

கலைமலியும் பேரவையிற் கரையில்அபிப் பிராயமெழுந்
தலையெதியுங் கடனடுவண் அமைதிவடி வாயெழுந்து
சில சொல்லிப் பேதமறத் தெளிவித்துச் சபைதாங்குந்
தலைமைக்கும் நடேசபிள்ளை தாமொருவன் ஒருவனே;

தமிழ்ப்பற்றே தாரகமாத் தனக்கெனவோர் பற்றின்றி
இமிழ்திரைசூ முலகபணி இறைபணியென் றெப்பொழுதும்
அமிழ்தொழுகும் அரன்கழற்கே அர்ப்பணித்த சிந்தையராம்
தமிழ்த் தொண்டன் நடேசபிள்ளை தாமொருவர் ஒருவரே.

**வேறு**

ஞானத் திருவசர் நடேசபிள்ளை மிக்கிலரேல்
மானக் கலைஞான வாழ்வெங்கே — மோனத்
தனிமைக் கிடமெங்கே தண்ணார் தமிழின்
இனிமைக் கிடமினியெங் கே.

சீர்திகழுஞ் செம்மல் நடேசபிள்ளை செந்தமிழின்
ஏர்திகழும் பண்பிற் கியாருளரே — யார்வரவுங்
கண்டே கரங்கூப்பக் கண்மலர உண்ணெகிழ்வு
கொண்டே குதூகலிக்குங் கோ.

# நாணயக்காராவுக்கு பண்டிதமணி வாழ்த்து

தமிழ் அறிஞர் திரு. டீ. டீ. நாணயக்காராவுக்கு பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அண்மையில் எழுதிய கடிதம் இது.

அன்பர். திரு. டீ. டீ. நாணயக்கார அவர்கள்.

சிங்கள தமிழ் சேதுபந்தனம்
சைவ பௌத்த சேது
பந்தனமுமாம்.

இலங்கை மாதா, திரு. நாணயக்கார அவர்கள் போன்ற பெருந்தகையாளர்களை உதவித் தன் மக்களிடையே சகோதரத்துவத்தையும் சமாதானத்தையும் வளர்ப்பாளாக.

எல்லாச் சமயமும் நிருப்பது நீதி என்பது சைவசமயத்தின் அடிப்படைக் கொள்கை.

திருவருள் நடத்தும் உலகத்தில் தனி மனிதனே ஒரு இனமோ மற்றொரு மனிதனையோ மற்றொரு இனத்தையோ நோவதற்கிடமே இல்லை. தாம் தாம் அனுபவிக்கும் இன்பதுன்பங்களுக்குத் தாம் தாமே கருத்தா:

'தீதும் நன்றும் பிறர்தர வாரா'

என்பது புறநானூறு.

நாவலர் அவர்களின் நீதியையும், நடுநிலையையும், அநீதிக்கு அஞ்சாமையையும் வெளிப்படுத்த நேர்ந்த சந்தர்ப்பங்களைத் தொகுத்து உதவி, திருவாளர் நாணயக்கார அவர்களைக்கொண்டு சிங்களத்தில்மொழி பெயர்ப்பித்து வெளியிடவேண்டுமென்பது என் உள்ளத்திற் குடிகொண்டிருப்பதொரு பெரு விருப்பம்.

அவ்வாறே மதிப்புக்குரிய ஸ்ரீ அநகாரிக தர்மபாலாவின் பெருமித தலைமைகளையும் தமிழிற் பெயர்த்துதவும் விருப்பை திரு. நாணயக்கார அவர்களுக்குக் கடவுள் அருள்வராக என்பது பிரார்த்தனை.

சகோதரத் துவததும்புகின்ற அகமுக மலர்ச்சியும், அன்புச் சிரிப்பும் திரு. டீ. டீ. நாணயக்கார அவர்களிடம் இளமைச்செவ்வியுடன் என்றும் பிரகாசிப்பதாக என்றும் திருவருளைப் பிரார்த்திப்போமாக

முதலாம் சைவ வினவிடையை மொழிபெயர்த்துதவிய அருமைபாராட்டியமையாது. வணக்கம்

## கடத்தல் பொருட்கள்

வல்வெட்டித்துறை, வெள்ளி

வல்வெட்டித்துறைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. ரூபஸ் மற்றும் கான்ஸ்டபிள்கள் பண்டார, அபயரத்ன, ரத்நாயக்க, குருகுலசூர்ய ஆகியோர் வல்வெட்டித்துறையிலுள்ள வீடொன்றினைத் திடீர்சோதனையிட்டதன் பேரில் அங்கு கள்ளக் கடத்தல் வேஷ்டி சால்வைகள் சாரிகள் ஆகிய 62 உருப்படிகளைக் கைப்பற்றினர்.

சுமார் 7000 ரூபா பெறுமதியான பிரஸ்தாப பொருட்களை வல்வைசுங்க இலாகாவில் ஒப்படைக்கப்பட்டன.

கைப்பற்றப்பட்ட பொருட்களை பறிமுதல் செய்து சொந்தக்காரரை ரூபா 1500 அபராதம் செலுத்தும்படியும் தீர்ப்பு வழங்கினார் யாழ் சுதலி சுங்க கலெக்டர் (அ)

# ஐ. நா. பொதுச்சபையை அவசரமாகக் கூட்ட யோசனை

வாஷிங்டன், பெப். 1

அல்ஜீரியா விடுத்துள்ள கோரிக்கையின்படி ஐ. நா. பொதுச்சபையை அவசரமாகக் கூட்டுவதற்கு அங்கத்துவ நாடுகள் ஆதரிக்கின்றனவா என்பதை அறிவதற்காக சம்பந்தப்பட்ட நாடுகள் யாவற்றுக்கும் ஐ நா. பொதுச்செயலாளர் டாக்டர் குர்த் வால்ட்ஹெயிம் கடிதம் எழுதிவருகிறார்.

மூலப்பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் பற்றியும், எண்ணெய்ப் பிரச்னைகள் பற்றியும் விவாதிக்க ஐ. நா. பொதுச்சபையைக் கூட்டும்படி அல்ஜீரியா ஐ நா. பொதுச் செயலாளரைக் கேட்டுள்ளது.

......

**அந்தமான் தீ விபத்து:**

## கருணாநிதி நிதி உதவி

சென்னை, பெப். 1

அந்தமான்தீவில் அண்மையில் ஏற்பட்ட பெருந்தீயினால் சொத்துக்களை இழந்தும் இதர வகையிலும் நஷ்டமடைந்தவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி முதலமைச்சர் நிதியிலிருந்து ஒருலட்சம் ரூபா ஒதுக்கியிருக்கிறார். இந்தப்பணத்தை உடனடியாகவே விநியோகிக்கும்படி அந்தமான் பகுதிக்குப் பொறுப்பாகவிருக்கும் கமிஷனரை அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## கட்டிடங்கள் இன்னும் திறக்கப்படவில்லை

வேலணை, வெள்ளி

யாழ். ஈவட்டத்திலும் தீவுப்பகுதியிலும் விவசாய விஸ்தரிப்புச்சேவை நிலைய கட்டிடங்கள் பூர்த்தியாகியும் இன்னும் இக்கட்டிடங்கள் திறக்கப்படவில்லை. இதனால் விவசாயிகளுக்கு இந்நிலையங்களால் கிடைக்கும் சேவை தடைப்படுவதாகவும். இக்கட்டிடங்களில் இடம்பெறவிருக்கும் இலங்கை வங்கிக்கிளைகளும் [illegible] தாகவும் கூறப்படுகிறது. (அ)

## திட்டமிட்டபடி விண்வெளியில் சஞ்சரிப்பர்

கென்னடிமுனை, பெப். 1

ஸ்கைலாப் விண் வீரர்கள் மூவரும் திட்டமிட்டபடி 84 நாட்கள் விண்வெளியில் சஞ்சரிக்கலாம் என்று ஹூஸ்டன் கட்டுப்பாட்டதிகாரிகள் அனுமதியளித்துள்ளனர்.

மூன்று வீரர்களும் நல்ல உடல்நிலையில் இருப்பதாக சோதனையில் தெரியவந்துள்ளது. வீரர்கள் மேலும் ஒரு வாரம் விண்வெளியில் இருப்பார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லாபப் பணத்தால் உருவான கட்டிடம்

(மீசாலை, வெள்ளி)

"நல்ல பொருட்களைப் பாவனையாளர்களுக்கு வழங்கிவந்த லாபப்பணத்தினால் கட்டியெழுப்பப்பட்ட இந்த மண்டபத்தில் இயங்கும் இந்த வங்கி எல்லோருக்குமே முன்மாதிரியாக விளங்குமென்பதில் சந்தேகமில்லை

இந்த அலங்கார மண்டபத்தைக் கட்டியெழுப்பிய, மேற்பார்வை செய்த கட்டிடக்கலை வல்லுநர் திரு. குலநாயகத்தை எவ்வளவுதான் நீங்கள் பாராட்டினாலும் தகும்."

இவ்வாறு கொடிகாமத்தில் தென்மராட்சி கிழக்கு ப. நோ. கூ. சங்கத்தால் ஸ்தாபிக்கப்பட்ட கிராமிய வங்கித் திறப்பு விழாவில் திறப்புரை ஆற்றிய வடபகுதி உதவி ஆணையாளர் திரு. சி. நாகலிங்கம் கூறினார்.

கிராமிய வங்கி பதில் ஆணையாளர் திரு. ஜே. டி ஜே. திரா‌ரணை திறந்துவைத்து உரையாற்றியதைத் தொடர்ந்து, உதவி ஆணையாளர் பேசும்போது இப்படிக் கூறினார்.

நெறியாளர் குழு தலைவர் திரு. எஸ். எம் கமலநாதன் தலைமையில் கூட்டுறவு மண்டப மேல்மாடத்தில் இந்தக் கூட்டம் வெகு சிறப்பாக நடந்தது.

இணையொன்றின் உபதலைவரான திரு. சி. செல்லத்துரை தனது வரவேற்புபசாரப் பாவில் பொதுமக்களின் பாவனைக்கு வேண்டிய சகல உணவுப் பொருட்களும் மற்றும் பொருட்களும் கூட்டுறவுக் கிளைகளிலே பெற சங்கம் வழி செய்யவேண்டும். இப்படிச் செய்தால் தனிப்பட்ட கடைகளில் கூடுதலான பணம் கொடுத்து மக்கள் வாங்கத் தேவையில்லை என்று கூறினார்.

உதவி ஆணையாளர் திரு. ரி. கந்தசாமி பேசும்போது 1971 முதல் 1973 முடியவுள்ள நெறியாளர் பணியாளர் எல்லோரும் சேர்ந்து ஒரு பாரம்பரியமான பரம்பரையை இந்த மணிமண்டபத்தை கட்டியெழுப்பியதால் ஸ்தாபித்தனர். அவர்களில் சிலர் இங்கே இல்லாவிட்டாலும் அவர்களுக்கு பாராட்டுகிறேன்." இவ்வளவு சிறப்பாக இந்த வங்கி ஆரம்பிக்கப்பட்டதுபோல இச்சங்கம் கலை, கலாச்சார பணியிலும் ஈடிணையற்ற சேவை செய்யவேண்டுமென வாழ்த்துகின்றேன்" என்றார்.

பண்டிதர் பி. எம். ஞானப்பிரகாசம் பேசும்போது, கடன் வாங்காமலே சங்கத்தின் லாபப் பணத்தால், நெறியாளர் பணியாளரின் முயற்சியால், கட்டி முடிக்கப்பட்ட மண்டபம். கிழக்கு நாட்டை வாழ்விக்க வந்த வங்கி என்றார்.

சாவகச்சேரி வங்கித் தலைவர் திரு. தணிகாசலம், திரு. க. முருகேசு, வித்துவான் பொன் கந்தையனார், பண்டிதர் பொன் வேலுப்பிள்ளை, திரு. கே. சரவணமுத்து ஆகியோர் உரையாற்றினர். கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலய மாணவிகள் கூட்டுறவுக் கீதம் பாடினர்.

# 6 மாதத்தில் சூயஸில் கப்பல் போகலாம்

கெய்ரோ, பெப். 1

இன்னும் ஆறு மாதத்தில் சூயஸ்கால்வாய் கப்பல்போக்குவரத்துச் செய்யக்கூடியதாகச் சீரமைக்கப்பட்டுவிடும்.

எகிப்திய அமைச்சர் ஒருவர் இத்தகவலை இன்று வெளியிட்டார்

1967-ம் ஆண்டிலிருந்து கப்பல் போக்குவரத்துக்கு 101 மைல் நீளமான இந்த சூயஸ் கால்வாய் மூடப்பட்டுள்ளது. 250 தொன் பாரமுள்ள பெரிய எண்ணெய் தாங்கிக் கப்பல்கள் செல்லக்கூடியதாக இக்கால்வாய் திருத்தியமைக்கப்படுமென்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சீரமைப்பு வேலைகளுக்கு ஐரோப்பிய நாடுகளும் அரபு நாடுகளும் பண உதவி செய்ய முன்வந்துள்ளன.

சூயஸ்கால்வாயைத் திருத்தி சீரமைப்பது என்பது ஒரு விஷயம் அதனை வெளிநாட்டுக் கப்பல் போக்குவரத்துக்குத் திறந்துவிடுவதென்பது இன்னொரு விஷயம். இஸ்ரேலுடனான பிரச்னைகள் யாவும் தீர்ந்த பிறகே எல்லா நாடுகளுக்கும் சூயஸ்கால்வாய் திறந்துவிடப்படும்.

# இளம்பெண்ணை தாக்கியதாக வழக்கு; எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், சனி

"காலையில் நான் வேலைக்குச் சென்றுகொண்டிருந்த போது எதிரி என்பின்னால் சைக்கிளில் வந்து என் தோளில் தட்டினார் 25 யார் தூரம் சென்றபின் திரும்பிவந்து சைக்கிளை என் மீது மோதவிட்டார். நான் கீழே விழுந்ததும் என் தோளை காலால் மிதித்துக் கொண்டு என்னைத் தாக்கினார்,

தாக்குதல் வழக்கொன்றில் சாட்சியமளித்த 18 வயதான வே. தவமணி மேற்கண்டவாறு கூறினார். இவ்வழக்கு யாழ். நீதவான் திரு. கே. பாலசிங்கம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் அரியாலை ஆனந்தன் வடலியைச்சேர்ந்த சு. இராசதுரை என்பவர் அதே இடத்தைச் சேர்ந்த வே. தவமணி என்பவரை அடித்துக் காயப்படுத்தியதாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிசார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம் ஆஜரானர். வழக்காளி சார்பில சட்டத்தரணி ஆர். விஸ்வநாதன் யாழ். பொலிசாரின் அனுசரணையுடன் ஆஜரானர்.

விசாரணையின் பின் நீதவான் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளித்தார். (க)

## குருபாபா 5-ம் திகதி வருகிறார்

யாழ்ப்பாணம், சனி

இம்மாதம் ஐந்தாம் திகதி சாயி குருபாபா யாழ். நகர் வருகிறார். பலாலி விமானநிலையத்தில் வந்திறங்கும் இவரை இராது பக்தர்களும் சிஷ்யர்களும் சிறப்பான வரவேற்பளிக்க ஏற்பாடு செய்துவருகின்றனர்.

# 'சந்நிதிக்கந்தர் சதகம்'

(யாழ்ப்பாணம், சனி)

பண்டிதர் க. நமசிவாயம் எழுதிய 'சந்நிதிக்கந்தர் சதகம்' நூல் வெளியீட்டுவிழா இம்மாதம் 6-ந் திகதி புதன் கிழமை நடைபெற விருக்கிறது. மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாசாலை மண்டபத்தில் கவிஞர் வி. கந்தவனம் தலைமையில் நடைபெறும் இவ்வெளியீட்டுவிழாவில் சைவப்பெரியார் திரு. மு. ஞானப்பிரகாசம் நூலை வெளியிட்டு உரையாற்றுவார். வித்துவான் ந. சுப்பையாபிள்ளை ஆசியுரையும் ஆசிரியர் திரு. சி. சின்னத்தம்பி வரவேற்புரையும் நிகழ்த்துவர். ஆசிரியர் திரு ச. விநாயகமூர்த்தி, பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, வ. நடராசா, அருட்கவி சீ. விநாசித்தம்பி, கவிஞர் சே. கதிரேசர்பிள்ளை, சிவத்தமிழ்ச்செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோர் நயப்புரை நல்குவர். (அ)

## புகார் மீது நடவடிக்கை

சங்கானை, வெள்ளி

சங்கானைப் பகுதியில் தரமற்ற பாண் விற்பனை செய்வதாகப் பொதுமக்கள் செய்த புகாரைத் தொடர்ந்து கூட்டுறவுப்பகுதியினர். உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி ஆகியோர் நடவடிக்கைமேற்கொண்டுள்ளனர்.

தொடர்ந்தும் உண்பதற்கு உதவாத பச்சைப் பாண் பேக்கரிகளினுல் விநியோகம் செய்யும் பட்சத்தில் அதன் குறைகளை உடனுக்குடன் தெரிவிக்கும் படியும் தாம் இதுபற்றி கடும் நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. (அ)

## தைப்பூசவிழா

யாழ்ப்பாணம், சனி

விநாயகபுரம் விநாயகர் ஆலயத்தில் இம்மாதம் 6-ம் திகதி தைப்பூச தினத்தன்று விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெறுவதுடன் அ. தி. க பாடசாலையில் நாவலர் சிலை நாட்டுதல், நடனநிகழ்ச்சிகள் மற்றும் பல நிகழ்ச்சிகள் நடைபெறுவதற்கும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ)

# அராலியில் ஒருவர் கொலை சந்தேகத்தில் ஒருவர் கைது

சங்கானை, வெள்ளி

இன்று அராலி கொட்டைக்காடு என்ற இடத்தில் ஒருவர் கொலைசெய்யப்பட்டார். இக்கொலை சம்பந்தமாக விசாரணையில் ஈடுபட்ட சங்கானைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். ரி. டி. சில்வா அதேஊரைச் சேர்ந்த சந்தேக நபரான கந்தன் மார்க்கண்டு என்பவரைக் கைதுசெய்ததுடன் கொலைசெய்வதற்குப் பாவிக்கப்பட்டதாகக் கருதப்படும் இரும்புச் சிலாகையையும் கைப்பற்றியுள்ளார்.

கொட்டைக்காட்டைச் சேர்ந்த கந்தையா அரியம் (வயது 35 என்பவரே கொலை செய்யப்பட்டவராவார்.

யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லும்போது உயிர்நீத்த இவரின் பிரேத பரிசோதனையும் மரண விசாரணையும் ஆஸ்பத்திரியிலேயே நடைபெறவுள்ளன.

கள்ளுவிற்பனையில் ஏற்பட்ட தகராறே கொலைக்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

# தந்தை பணம் கொடுக்க மறுத்தாராம்: மகள் தற்கொலை

யாழ்ப்பாணம், சனி

மருத்துவ தாதி பயிற்சிக்கு விண்ணப்பம் செய்வதற்குத் தந்தை பணம்கொடுக்காததால் கவலையடைந்த மாணவி நஞ்சுகுடித்திருந்தாள் அருந்தி தற்கொலைசெய்துகொண்டார்.

மண்டைதீவைச் சேர்ந்த செல்விப்பிரகாசம் திரிபுரநாயகி ... மரணவிசாரணை அதிகாரி திரு. வி. நடராசா மரணவிசாரணை நடத்தினார்

இப்பெண் ஜி. சி. ஈ. பரீட்சை எழுதியபின், தாதிக்கு விண்ணப்பிக்க விரும்பியதாகவும், அருவி வெட்டிவிட்டு பணம் தருவதாக தந்தை கூறியதைத் தொடர்ந்து மனமுடைந்து காணப்பட்டார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

பெற்றோர்கள் சாட்சியமளித்ததைத் தொடர்ந்து மரண விசாரணை அதிகாரி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## குச்சுப்புடி பழக தமிழ்நாடுபயணம்

யாழ்ப்பாணம், சனி

வடமராட்சி இசைக்கலை மன்றத்தின் நடன ஆசிரியை ... தனது சிஷ்யைகளுடன் தமிழ்நாடு சென்றுள்ளார். குச்சுப்பிடி, கதக் போன்ற நடன வகைகளை ... வதற்கென ... மதிக்கப்பட்டுள்ளனர்.

# தனியார் வாகனசேவை கட்டணமும் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

தனிப்பட்டபஸ்களும் வான்களும், நேற்றுமுதல் வடபகுதியில் கட்டணத்தை அதிகரித்துள்ளன.

சகல இடங்களுக்கும் இ. போ. ச. பஸ்சேவை குறைந்துள்ளதைத் தொடர்ந்து பிரயாணிகள் தனிப்பட்ட வாகனங்களை நாடிச்செல்கின்றனர்.

தனிப்ப... வ... கள் ... பாதைகளிலும் சேவைகளை ஆரம்பித்துள்ளன. சேரதீவிலிருந்து சாவகச்சேரி ஊடாக யாழ்ப்பாணத்திற்கு நேற்றுமுதல் தனிப்பட்ட பஸ்சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு முன்பு 40 சதமாக இருந்த கட்டணத்தை தனிப்பட்ட வாகனங்கள் 60 சதமாக அதிகரித்துள்ளன.

# திருடமுயன்றனராம்: இருவர் கைது

(சங்கானை, வெள்ளி)

ப. நோ. கூ. சங்கக் கிளை ஒன்றை உடைத்து உட்புகுந்த கள்வர் வகையாக மாட்டிக் கொண்ட சம்பவம் ஒன்று சுழிபுரத்தில் நடைபெற்றுள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு சுமார் 10 மணியளவில் சுழிபுரம் வடக்கு-கிழக்கு ப. நோ. கூ. சங்கக்கிளையின் உட்புறம் மின்விளக்கு எரிவதையும் ஆள் ஒன்று திரிவதையும் அவதானித்த காவலாளி வ. துரைசிங்கம் அயலவர்களுக்குத் தெரிவித்து அவர்கள் உதவியுடன் உள்ளே நின்ற நபரை மடக்கிப்பிடித்து பொலிசாரிடம் ஒப்படைத்தார். சம்பவம் நடைபெற்றவேளை மற்றும் ஒருவர் கூரைமீது இருந்து குதித்து ஓடியதைக் கண்டனைத் தொடர்ந்து விசாரணை நடாத்திய சங்கானை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் சில்வா சந்தேகத்தின் மீது ஒருவரைக்கைது செய்தார்.

பொலிசார் நடாத்திய விசாரணையில் கூரையில் ஓட்டைப் பிரித்தே இவர்கள் உட்புகுந்தனர் எனவும் அகப்பட்ட இரு சந்தேக நபர்களும் சுளிபுரத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

தப்பிச்செல்ல எத்தனிக்கையில் ஏற்பட்ட காயங்களினால் ஒருவர் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மற்றவர் றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார். (அ)

# 'பாண் தராவிட்டால் அறிவியுங்கள்'

— அரசாங்க அதிபர்

யாழ்ப்பாணம், சனி

"யாழ்ப்பாணம் மாநகர சபைப்பகுதியிலுள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் பாண் பெறுவதற்கு புதிய திட்டம் வழி வகுத்துள்ளது ஐந்து பேர் கொண்ட குடும்பத்துக்கு ஒரு றாத்தல் பாணும் அதற்கு மேற்பட்டவர்கள் இரு றாத்தல் பாணும்பெறலாம், எந்தக் குடும்பத்தினருக்காவது பாண் கிடைக்காவிடில் உடனடியாக எனக்கு புகார் செய்தால் நடவடிக்கை எடுப்பேன்"

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா நேற்று காலை நடந்த பத்திரிகையாளர் மகாநாட்டில் மேற்கண்டவாறு தெரிவித்தார் இம்மகாநாட்டில் உதவி உணவுக்கட்டுப்பாட்டு அதிகாரி திரு. ஆனந்தனும் கலந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் பதினேழு பேக்கரிகளிலும் 23 கிளைடிப்போக்களிலும் பாண் விநியோகம் நடைபெற்று வருவதாகவும் நண்பகல் 12 மணிக்கு முன்னர் பாண் விநியோகம் முடிவடைந்து விடவேண்டுமென்றும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு குடும்பத்தினரும் பாண் பெறக்கூடியதாக இருக்குமென்றும் மாலை 5 மணிக்கு முன்னர் எவரும் பாண் வாங்காவிட்டால் பின்னர் அப்பாணை அவர்கள் பெறமுடியாதென்றும் அவர் தெரிவித்தார்.

இச்சமயம் நல்லூர் தெருவிலுள்ள சுந்தரமடம் வண்ணார்பண்ணை 1 வண்ணார் பண்ணை 1 ஏ கிளைகளில் பாண் விநியோகம் இரவு 7 மணிக்கு பின்னரும் நடைபெறுவதாகவும் இதனால் மக்கள் கஷ்டப்படுவதாகவும் இதற்கான காரணம் என்ன என அரசாங்க அதிபரிடம் கேட்கப்பட்டது.

பாண் விநியோகம் செய்யும் வாகனங்கள் குறைவாக இருப்பதனால் சில இடங்களில் தாமதமேற்படுவதாகவும், காலை 7 மணிக்கே பேக்கரிகளில் பாணைப் பெறலாம் என்றும் 8 மணிக்கே கிளைடிப்போக்களுக்கு விநியோகம் செய்யலாமென்றும், உதவி உணவுக்கட்டுப்பாட்டதிகாரி திரு. ஆ. ஆனந்தன் தெரிவித்தார்.

பேக்கரியிடமிருந்து 78 சதமாகவே பாணை வாங்கி 80 சதமாக கிளை டிப்போ விற்பனை செய்வதாகவும், ஒவ்வொரு பாணிலும் இரண்டுசதம், வாகனச் செலவுக்காக வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்விஷயமாக ஆராய்ந்து எல்லா டிப்போக்களிலும் நண்பகல் 12 மணிக்கு முன்னரே பாண் விநியோகம் நடைபெற வழிசெய்வதாக அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணநகரைத் தவிர்ந்த மற்றப்பகுதிகளில், ... ரங்கப்பகுதிக் ... காரியாசிரி களே, பாண் விநியோகம், பா...

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆசிரியர் உரிமையை எவராலும் பறிக்கமுடியாது"

(உடுப்பிட்டி, வெள்ளி)

"ஆசிரியர்கள் தமது உரிமைகளையும், அபிலாசைகளையும் அனுபவிக்கத் தகுதியுடையவர்கள். அவர்கள் தனித்தியங்குவதால் தமது குறைகளுக்கும், கஷ்டங்களுக்கும் பரிகாரம் காண முடியாது. ஆசிரிய சங்கங்களில் சேர்ந்து, அவற்றின் மூலம் அணி திரண்டாலே ஆசிரியர்களின் போராட்டங்கள் வலிமை பெறும். இதே வேளையில் எந்தவொரு ஆசிரியனும் ஆசிரிய சங்கங்களில் அங்கம் வகிக்கும் உரிமையையும் எவராலும் பறிக்க முடியாது."

மேற்கண்டவாறு ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆசிரிய தொழிற் சங்கமான ஸ்ரீலங்கா குரு சங்கத்தின் யாழ். மாவட்டக் கிளையை முதற் தடவையாக அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் ஸ்ரீலங்கா குரு சங்கப் பொதுச் செயலாளர் திரு. பண்டார குறிப்பிட்டார்.

இவ்வங்குரார்ப்பணக் கூட்டம் புலோலி மெதடிஸ்த மிஷன் பாடசாலை மண்டபத்தில் காங்கேசன்துறை சுதந்திரக் கட்சி அமைப்பாளரும், ஆசிரியருமான திரு. ரி. பி. முருகையா தலைமையில் நடைபெற்றது. திரு. பண்டார தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"இன்று வடபகுதி ஆசிரியர்களுக்கு மிகவும் குதூகலமான தினமாகும். இதுவரைகாலமும் பல ஆசிரிய சங்கங்கள் ஆசிரியர்களைக் கருவியாகப் பாவித்துச் சுயலாபம் சம்பாதித்து வந்தன. ஸ்ரீலங்கா குரு சங்கம் ஆசிரியர்களின் விழிப்புணர்ச்சியைத் தட்டியெழுப்பி அவர்களது உரிமைகளுக்காகப் போராட முன்வந்துள்ளது. எமது சங்கம் ஒரு சாராருக்கு மட்டும் சொந்தமானதல்ல. இந்த நாட்டில் வாழும் சகல ஆசிரியர்களுக்கும் சொந்தமானது. இந்த அடிப்படையிலேயே குரு சங்கத்தை உங்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கின்றோம்."

வடபிரதேச தேர்தல் தொகுதிகளில் 5 பிரதேசங்களிலிருந்தும் பத்துப் பிரதிநிதிகள் வீதம் 50 அதிபர்களும், ஆசிரியர்களும் இவ்வங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். உடுப்பிட்டித் தொகுதி சுதந்திரக் கட்சி அமைப்பாளர் திரு. கே. ரி. இராஜலிங்கம், கோப்பாய் அமைப்பாளர் திரு. அ. வைத்திலிங்கம் ஆகியோரும் சமூகமளித்திருந்தனர். திரு. கருணாநிதி நன்றி கூறினார்.

## ஓய்வு பெற்றார்

சித்தன்கேணி, வெள்ளி

அராலி வடக்கு அமெரிக்கன் மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை உப அதிபர் திரு. ஏ. ரி. நவரத்தினம் தமது ஆசிரிய சேவையிலிருந்து இம் மாதம் ஓய்வு பெற்றுள்ளார். வெளி மாவட்டங்களில் அதிக காலம் சேவையாற்றி வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாசாலைக்கு மாற்றப்பட்ட இவர் வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாசாலையில் சிறிது காலம் கடமையாற்றிய பின்னர் அராலி வடக்கு அமெரிக்கன்மிஷன் த. க. பாடசாலைக்கு மாற்றப்பட்டார். (அ)

## ஆசிரியர் பற்றாக்குறை

சித்தன்கேணி, வெள்ளி

அராலி இந்துக் கல்லூரியில் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. வெளி மாவட்டங்களிலிருந்து தைமாதம் மாற்றப்பட்டிருந்த ஆசிரியர்களும் வேறுபாடசாலைகளுக்கு மாறிச் சென்றுள்ளனர். இதனால் ஆசிரியர்கள் இல்லாது வகுப்புகள் வெறிச் சோடிக் கிடக்கின்றன. மாணவர்களின் நன்மையில் அக்கறையுள்ள பெற்றோர்கள் பலரும் பழைய மாணவர்கள் பலரும் அதிபர் திரு. பி. சண்முகராசாவைச் சந்தித்து ஆசிரியர்கள் பற்றாக்குறையை நீக்குமாறு கேட்டுள்ளனர். [அ]

## உற்சவம்

சரவணை, வெள்ளி

புங்குடுதீவு கிழக்கு-தலைபற்று ஸ்ரீசங்கரமூர்த்தி- முருகமூர்த்தி கோவில் வருடாந்த உற்சவம் இம்மாதம் 28-ந் திகதி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகிறது.

அடுத்த மாதம் 6-ந் திகதி தைப்பூசத்தன்று நடைபெறும் சங்காபிஷேகத்தைத் தொடர்ந்து "திருவூஞ்சல்" திருவிழாவும் நடைபெறும்.

# "மக்கள் கஷ்டங்களை அரசு உணர்ந்துள்ளது"

## காலியில் வர்த்தக அமைச்சர்

(காலி, வெள்ளி)

மக்கள் படும் கஷ்டத்தை அரசு நன்கு உணர்ந்துள்ளது. ஆனால் மக்களின் நலன்கருதியே சில தீவிர நடவடிக்கைகளை எடுக்க நேர்ந்துள்ளது என்று உள் நாட்டு வெளி நாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின கூறினார்.

காலி மாநகரசபை எல்லையுள் அமைந்த மேற்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஆதரவில் பெதுருதேவில சந்தியில் கிராம வங்கிக் கிளையொன்றைத் திறந்துவைத்த பின்னர் திரு. இலங்கரத்தின பொதுக் கூட்டமொன்றில் பேசினார்.

அவர் மேலும் பேசுகையில், பிரதம மந்திரி மிக முக்கியமான வெளிநாட்டுப் பிரயாணம் ஒன்றை மேற்கொள்ளவிருந்த சமயத்தில் எதிர்க் கட்சியினர் புரட்சிபற்றி செய்திகளை வெளியிட்டு பரபரப்பு ஏற்படுத்த முயற்சி செய்தார்கள் என்றார்.



கூட்டுறவு முறை திருத்தி அமைக்கப்பட்டபோது அரசியல் அடிப்படையில் இயக்குநர்களை நியமிப்பதற்குச் சட்டம் கொண்டுவந்தேன். இப்போது இத்திட்டம் வெற்றியளித்துள்ளது என்றார் திரு. இலங்கரத்தின. ஐக்கிய முன்னணி ஆதரவாளர்களல்லாதவர்களைக்கொண்டு இந்த இயக்குநர்கள் நியமிக்கப்பட்டிருந்தால் நிலைமை மோசமாகியிருந்திருக்கும் என்றார் அமைச்சர். ஐக்கிய முன்னணி அரசு கூட்டுறவு முறைக்கு முக்கிய இடம் கொடுக்கின்றது. ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இவ்வியக்கம் பெரும் பங்காற்ற வேண்டியிருக்கின்றது என்றார். யூனியன் டைரக்டர்களில் ஒருவரும், காலி எம்.பி யுமான டாக்டர் டபிள்யு. தஹநாயக்கா அமைச்சரின் விஜயத்தை பகிஷ்கரித்தார். தமது ஆட்சேபத்தைத் தெரிவித்து அவர் தந்தியொன்றை அனுப்பியிருந்தார். காலி மேயர் திரு. டி. பி. விஜேநாராயண மற்றும் பலர் பேசினார்கள்.

## மணமக்களின் மாட்டுவண்டி ஊர்வலம்

(கண்டி, வெள்ளி)

அழகான கல்யாண ஊர்வலங்களை அழகிய கார்களில் கண்டுகளித்த கண்டிமக்கள், கடந்த வாரம் அலங்கரிக்கப்பட்ட மாட்டு வண்டியில் சதங்கை ஒலியுடன் கம்பீரமான காளைகள் இழுத்துச் சென்ற காட்சியைக் கண்டு களிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

இச்சம்பவம் நம்புக்கனைப் பகுதியில் நடந்தது. புதிய தம்பதிகள் ஒரு வண்டியிலும், உறவினர்கள் வேறு பல வண்டிகளிலும் சென்றனர். எல்லா வண்டிகளுமே அலங்கரிக்கப்பட்டு இருந்தன.

பெற்றோல் தட்டுப்பாட்டைச் சமூகமாகத் தீர்க்கவே இந்த நடவடிக்கை என்று மணமகன் சந்தோசத்துடன் தெரிவித்தார்.

## கணவனைப் பிரிந்திருந்த இளம்பெண் தற்கொலை

(வல்வெட்டித்துறை, விபா)

கணவனைப் பிரிந்து வாழாவெட்டியாக இருக்க விரும்பாத இளம் பெண் நஞ்சருந்தித் தற்கொலை செய்துகொண்டார்.

இச்சம்பவம் புலோலி தெற்கில் நடைபெற்றது. இதுபற்றிக் கூறப்படுவதாவது:- சின்னையா அமரரத்தினம் என்பவரின் மனைவி பொன்னம்மா [வயது 26] தனது கணவனுடன் கோபித்துக்கொண்டு சுமார் எட்டுமாத காலம் தாயார் வீட்டில் வாழ்ந்து வந்தார்.

வாழ்வில் ஏக்கங்கொண்ட பெண் நேற்றைய தினம் நஞ்சருந்தித் தன் உயிரை மாய்த்துக்கொண்டார்.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. ஆர். எஸ். இராமநாதன் முன்னிலையில் இறந்த பெண்ணின் தாயார் மேற்கண்ட தகவலைக் கூறி தனது மகள் தனது வீட்டின் பின்புறம் சென்று மருந்து அருந்திவிட்டதாகக்கூறி மூர்ச்சித்தார் என்றும் டாக்டரிடம்கொண்டு சென்றதாகவும் அங்கு மரணமானார் என்றும் தெரிவித்தார். டாக்டர் கமலாம்பிகை நடராசாவும் சாட்சியமளித்தார்.

விசாரணை முடிவில் தற்கொலையென திடீர் மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## உணவுற்பத்தியில் சாரணர்களை ஈடுபடுத்தலாம்!

(மாவிட்டபுரம், வெள்ளி)

"இன்றுள்ள சாரணர்களைப் போல் இருமடங்கு சாரணர்களை உருவாக்கி அவர்களை உணவுற்பத்தியில் ஈடுபடுத்துவதன்மூலம் நாட்டின் உணவு நெருக்கடிக்கு உதவமுடியும்".

இவ்வாறு யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெற்ற அகில இலங்கைரீதியான சாரண அபிவிருத்தி ஆண்டு நிறைவுவிழாவிற்குத் தலைமை வகித்துப் பேசிய மாவட்ட ஆணையாளர் திரு. ஜே. ஜி. அரசரத்தினம் கூறினார்.

இவ்விழாவில் சாரண உயர் ஆணையாளர் திரு. ஆர். ஏபிரகாம், யாழ். உதவிக் கல்விப்பதி திரு. சுபசிங்கா ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்கள்.

இவ்விழாவில் திரு. அரசரத்தினம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இன்று சாரணசேவையில் மாணவர்கள் ஊக்கத்துடன் ஈடுபடுகிறார்கள். அத்துடன் சாரணர்தான் உணவு உற்பத்தியிலும் கூடுதலாக ஈடுபட்டு வருகிறார்கள்.

சாரணசேவையில் ஈடுபடுவதன் மூலம் சாரணர்கள் நல்ல தன்மைகளைப் பெற்று விவசாயத்திலும் கூடுதலாக ஈடுபடுவார்கள். கடமையுணர்ச்சியும், நாட்டுக்காகப் பாடுபடும் நல்நோக்கமும் சாரணர்களுக்கு இயல்பாகவே ஏற்பட்டுவருகிறது.

ஆகவே இன்றுள்ள சாரணர்களைப்போல் மேலும் இருமடங்கான சாரணர்கள் உருவாக்கப்படல் வேண்டும். அவர்கள் உணவு உற்பத்தியில் ஈடுபடுவதன்மூலம் நாட்டின் உணவு நெருக்கடிக்கு உதவ முடியும் என்றார்.

இவ்விழாவில் குருளைவர்தகு சின்னம் பதக்கம் ஒன்றின் சான்றிதழை மாவட்ட ஆணையாளர். காங்கேசன்துறை கூட்டுச் சாரணர்குழு தலைவர் திரு. நா. போஜனுக்கு வழங்கினார்.

## ஆசிய கூட்ட பாதுகாப்பு பற்றிய நூல்

[புதுடில்லி, பெப். 1]

"ஆசியாவில் கூட்டு பத்தோபத்தை நோக்கி" என்ற நூல் இங்கு வெளியிடப்பெற்றுள்ளது. டி. கௌசிக்கும் எஸ். பீர்தவும் இந்நூலின் ஆசிரியர்களாவர்.

ஆசியாவின் அரசியல் வாழ்க்கைப்பிரச்னையை ஆராய்வது திரு. இந்நூல் பயனுள்ள பல காற்றுகிறது. ஆசியாவில் கூட்டுபத்தே பத்தில் அரசியல் அம்சங்கள் பற்றி, இந் நூலாசிரியர்கள் மிகுந்த கவனம் செலுத்தியுள்ளனர். அகில ஆசிய அடிப்படையில் பந்தோபஸ்தை ஏற்படுத்துவது ஒத்துச் சோவியத் யூனியன் வெளியிட்டுள்ள கோட்பாடுகள் எல்லாவற்றுக்கும் மேலாக நாடுகளுக்கிடையேயுள்ள உறவுகளில் நல்லுறவுகளைப் பலப்படுத்தாதிருத்தல் பற்றிய கோட்பாடுகள் ஆசிய நாடுகளிடையேயும் உறவுகளில் அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன என்றும், சமாதான சகவாழ்வுக்கு ஓர் உறுதியான அடிப்படையாக அவை விளங்குகின்றனவென்றும் இந்நூலின் ஆசிரியர்கள் கூறுகின்றனர்.





நீண்ட, குளிர்மையான குளு குளுப்பான புத்துணர்ச்சி தருவது

குளிர்மையான, மெந்தோல் பில்டர் முனை சிகரெட்டுக்கள். தற்கால நவீன புகையின்பத்திற்கு பசுமையுடன் உங்களை அழைத்துச் செல்வன.

மெந்தோல் முனை கொண்டது

மெட்டஹோன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகம்மாள் (கொக்குவில்)
தினசரி 6-30, இரவு 9-30
சனி, ஞாயிறு பி. ப. 2-30
ஜெய்சங்கர்-பாரதி
உனக்கும் எனக்கும்

வெஸ்லி (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
எம்.ஜி.ஆர்-பத்மினி
ராணி சம்யுக்தா

REGAL (Jaffna)
Daily 4-45, 7 & 9-30P m
Charles Bronson, Jack Palance
CHATO'S LAND
(Color)

ராஜா
[யாழ்ப்பாணம்]
தினசரி காலை 10-30, பி.ப.2-30
6-15, இரவு 9-45
சிவாஜி - ஜெயலலிதா
நடித்த
ராஜா
( புதிய கொப்பி - ஈஸ்ட்மென்கலர் )

றியோ (நகர மண்டபம்) யாழ்ப்பாணம்
Daily 10-30 a. m. 9-45 p. m.
CIRCUS ON PARADE

தினசரி பி. ப. 2-30, இரவு 6-30
முத்துராமன் - நிர்மலா - ஜெய்சங்கர் - நாகேஷ்
நீதி தேவன்

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஏ வி எம் ராஜன்
நிர்மலா
அவள்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - அசோகன்
ஜெயலலிதா - மனோரமா
நடித்த
எங்கள் தங்கம்

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி காலை 10-30, 2-30, 6-30, 9-30
★ தமிழகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச் சித்திரம்.
★ தமிழ்த்திரை உலகிலேயே இதுவரை செய்யப்படாத புதுமை இந்தப்படத்தில் புகுத்தப்பட்டு இருக்கிறது.
சிவாஜி - கே. ஆர். விஜயா - முத்துராமன்
பாலாஜி - நாகேஷ் ராஜ்ஸ்ரீ - மனோகர்
எம். ஆர். ஆர். வாசு நடித்த




சிறீதர் (யாழ்ப்பாணம்)
[10-00, 2-00, 6-00, 9-30 மணிக்கு
ஆஷா பரேக்
ஹெலன்
நடித்த]
கரவன்


# விளையாட்டுக் கழகத்துக்கு கல்லூரி அதிபர் பாராட்டு

[யாழ்ப்பாணம், சனி]

விளையாட்டுக் கழகங்கள் காலத்திற்குக்காலம் கிராமங்கள்தோறும் ஆரம்பிக்கப்பட்டு வருகின்றபோதிலும் அவை அனேககாலம் செயல்படாது சிலமாதங்களுக்குள் அழிந்து போகின்றன. ஆனால் காங்கேசன்துறை யங்ரோயல் விளையாட்டுக்கழகம் தனது மூன்றுவது ஆண்டை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்துவிட்டது என்பதை அறியும்பொழுது அக்கழக அங்கத்தவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது. யங்ரோயல் விளையாட்டுக்கழகத்தினர் இச்சுற்றுப் போட்டியை நடத்தியதன்மூலம் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 45 விளையாட்டுக்கழகங்களுக்கு உதைபந்தாட்டத்துறையில் ஊக்கம் அளித்துள்ளார்கள். அத்துடன் காங்கேசன்துறைப் பட்டினத்தைப்பொறுத்தவரையில் பல்வேறு பாடசாலை மாணவர்களைத் தனது அங்கத்தவராகக் கொண்ட இக்கழகம் அவர்களை உதைபந்தாட்டம், கிரிக்கட், கைப்பந்தாட்டம், ஓட்டப்போட்டிகளில் பயிற்சியும் அளித்துவருகிறது".

இவ்வாறு காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி அதிபர் திரு. பொ. சோமசுந்தரம் காங்கேசன்துறை யங்ரோயல் விளையாட்டுக்கழக மூன்றாவது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதிநாள் நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து உரைநிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

மூன்றாம்பிரிவு இறுதிப் போட்டிக்கு வைத்தியகலாநிதி இ. இராசேந்திரமும், இரண்டாம்பிரிவு இறுதிப்போட்டிக்கு காங்கேசன்துறை பொலிஸ் தலைமைக்காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. சி. இராஜேஸ்வரனும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கழகக் கொடிகளை ஏற்றிவைத்து வீரர்களுக்கு அறிமுகம் செய்துவைக்கப்பட்டனர்.

முதலாம்பிரிவுப் போட்டியில் வல்வெட்டித்துறை விளையாட்டுக்கழகத்தை மயிலிட்டி கண்ணகி விளையாட்டுக்கழகம் 5-0 கோல்களாலும், இரண்டாம் பிரிவு போட்டியில் அளவெட்டி புளூபேர்ட்ஸ் விளையாட்டுக்கழகம் ஊறணி புனித அந்தோனியார் விளையாட்டுக் கழகத்தை 5-4 கோல்களாலும், 3-ம் பிரிவுப்போட்டியில் அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் அளவெட்டி புளூபேர்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தை 3-0கோல்களாலும் வெற்றியீட்டினர். காங்கேசன்துறைப் பட்டின சபை மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. கே. கிருஷ்ணனும், திரு. பி. இராசேந்திராவும் மத்தியஸ்தர்களாகக் கடமையாற்றினர். விழா இறுதியில் பிரதம விருந்தினர்களுக்கும், உதைபந்தாட்ட வீரர்களுக்கும் யங்ரோயல் விளையாட்டுக் கழகத்தினர் தேனீர் விருந்தளித்துக் கௌரவித்தனர்.

## பஸ் நிலையத்தில் பொதித் திருட்டு

(வேலணை, வெள்ளி)

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் பொதித்திருட்டு அதிகரித்துள்ளது.

பஸ் நிலையத்தில் பொதியை வைத்துவிட்டு பஸ்ஸை எதிர்பார்த்துக்கொண்டு நிற்கும் பொழுதும், இ.போ.ச. அனுமதியுடனும், அனுமதி இல்லாமலும் நிற்கும் பொதிதூக்குபவர்களின் உதவியுடன் பிரயாணிகள் பொதிகளைத் தூக்கும் பொழுது ஏதாவதொரு பொதி மாயமாக மறைகிறதாம். [ ]

# ஒரே வீட்டில் இரண்டு தடவை பொலிஸ் சோதனை!

## கடத்தல் சேலைகள் அகப்பட்டன

வல்வெட்டித்துறை, வெள்ளி

வல்வைப் பொலிசாரின் திடீர்விஜயத்தில் ஒரேவீட்டில் இரு தடவைகள் கள்ளக்கடத்தல் பொருட்கள் பிடிபட்டன.

வல்வைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு ரூபன் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் ஒரு வீட்டினைத் திடீர் சோதனையிட்டனர். அப்பொழுது அங்கு சுமார் 2000 ரூபா பெறுமதியான 46 இந்திய கடத்தல் சாரங்களைக் கைப்பற்றினர்.

இடைக்கிடைப் பெற்ற ரகசியத் தகவலைத் தொடர்ந்து மீண்டும் சோதனையிட்ட சமயம் அங்கு சுமார் 12,500 ரூபா பெறுமதியான இந்திய மணிப்புரி மற்றும் பட்டுச் சேலைகளையும் கைப்பற்றினர்.

கைப்பற்றப்பட்ட பொருட்களையும் வீட்டின் சொந்தக்காரரையும் வல்வை சுங்கநிலையப் பொறுப்பதிகாரியிடம் ஒப்படைத்தனர்.

இதுபற்றி யாழ். மாவட்ட சுங்கச் சேகரிப்பாளர் விசாரணை நடாத்தினார்.

கைப்பற்றப்பட்ட பொருட்களைப் பறிமுதல் செய்ததுடன் 5000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

## வலி. வடக்குப் பாண் விநியோகம்

மாவிட்டபுரம், வெள்ளி

வலி-வடக்குப் பகுதி பாண் விநியோகத்தை மேற்கொண்டிருந்த தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தற்போது மேற்படி விநியோகத்தை தனியார் பேக்கரி ஒன்றிடம் ஒப்படைத்துள்ளது. முன்னர் இச்சங்கம் இப்பகுதிகளிலுள்ள பாண் பேக்கரிகளில் பாணைப் பெற்று தனது வாகனங்கள் மூலம் தனது கிளைகளுக்கும் மற்றும் உத்தரவு பெற்ற வியாபாரிகளுக்கும் வழங்கிவந்தது.

இனி, பிரசித்தமான பேக்கரி உரிமையாளர் இப்பகுதியைச் சேர்ந்த பாண் பேக்கரிகளில் பாணைப் பெற்று தமது வாகனங்கள் மூலம் கூட்டுறவுச் சங்கக்கிளைகளுக்கும், மற்றும் உத்தரவு பெற்ற வியாபாரிகளுக்கும் வழங்கவும் அப்பாணை கூட்டுறவுக்கிளைகளும் உத்தரவு பெற்ற வியாபாரிகளும் பொது மக்களுக்கு விநியோகிக்கவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (அ)

## அனுதாபம்

பருத்தித்துறை, வெள்ளி

"கல்வித்துறையில் புதிய மாற்றங்கள் உருவாகும் இன்றைய காலகட்டத்தில், பழுத்த அனுபவமிக்க கல்விமான்களின் ஆலோசனையையும், அனுபவத்தையும், சேவையையும் இழப்பது, பலாலி ஆசிரியர்பயிற்சிக்கலாசாலைக்கு மட்டுமன்றி நாட்டுக்குமே ஈடுசெய்யமுடியாத இழப்பாகும். பல ஆண்டுகளாக மட்டக்களப்பு ஆசிரியர்கலாசாலை கோப்பாய் ஆசிரியர்கலாசாலை பலாலி ஆசிரியர்கலாசாலை ஆகிய ஆசிரியரை உருவாக்கும் கல்விப்பீடங்களில் பலரும் பாராட்டிப் போற்றும்வண்ணம் கடமையாற்றிய திரு. கந்தப்புவின் அகால மரணம் அவருடைய குடும்பத்துக்கு மட்டுமல்ல முற்போக்கான திட்டங்களை கல்வித்துறையில் செயற்படுத்தவிழையும் கல்விமான்கள் உலகுக்கே பேரதிர்ச்சிதரும் நிகழ்ச்சியாகும்"

இவ்வாறு கடந்த புதன் கிழமை பிற்பகல் பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளரும், கல்விமானுமாகிய திரு. வே. கந்தப்புவின் மரணச்சடங்குகளில் இறுதிமரியாதை செலுத்துமுகமாக கரவெட்டியில் நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் உரைநிகழ்த்திய பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் திரு. எஸ். மகேசு கூறினார்.

நூற்றுக்கணக்கான ஆசிரியரும் ஆசிரியர் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும், பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைமாணவ மாணவியரும் கலந்துகொண்ட இக் கூட்டத்தில் நாட்டின் பல கல்விமான்கள், அரசியல்வாதிகள், பிரமுகர்கள் ஆகியோரின் அனுதாபச்செய்திகளும் வாசிக்கப்பட்டன.

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை மாணவர் சார்பாகப் பேசிய திரு. சி. வை. தனேஸ்வரன் திரு. கந்தப்புவின் சேவையின் பெருமதிவை பிறரிலும் பார்க்க நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பிகளான ஆசிரிய மாணவரே நன்கு உணர்ந்துள்ளனர் எனக் குறிப்பிட்டார். கரவெட்டியிலுள்ள திரு. கந்தப்புவின் குடும்ப வளவில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பல பிரமுகர்களும் உரையாற்றினர். கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை விரிவுரையாளர் திரு. கே. தங்கத்துரை நன்றி கூறினார்.

3-வது டெஸ்ட்

## இன்னிங்ஸால வெற்றி

சிட்னி, பெப். 1

ஆஸ்திரேலியாவுக்கும் நியூஸிலாந்துக்குமிடையே நடைபெற்ற 3-வது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா ஒரு இன்னிங்ஸ் 47 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

அவுஸ்திரேலியா 477 ஓட்டங்களையும் நியூஸிலாந்து முதலாவது இன்னிங்ஸில் 218 ஓட்டங்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 102 ஓட்டங்களையும் பெற்றன. இக்கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றிருந்தது. இரண்டாவது டெஸ்டில் நியூஸிலாந்து வெற்றிபெறும் வாய்ப்பிருந்தபோது மழை காரணமாக இடையில் நிறுத்தப்பட்டு வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.


சாந்தி (சங்கானை)
தினசரி 6-30, 9-30
ஞாயிறு பி.ப. 2-30
ஜெமினி-பாரதி
அவளுக்கென்று ஓர் மனம்
சனி காலை 10-30 மாலை 4-15
ஞாயிறு காலை 10-30


## ரூ. 40 ஆயிரம் பொருட்கள் மீட்பு

கொழும்பு, வெள்ளி

மருதானையிலுள்ள கட்டிடப் பொருட்கள் கூட்டுஸ்தாபனத்திற்குச் சொந்தமானதாகக் கருதப்படும், ரூபா 40,000 பெறுமதியான பொருட்களை ஒற்றர்தடுப்பு இலாகா கைப்பற்றியது. இவையனைத்தும் களவாடப்பட்டு யாழ்ப்பாணம், கண்டி, அம்பாந்தோட்டை, கொழும்பு ஆகிய இடங்களில் பதுக்கி வைத்திருந்ததாகக் கருதப்படுகின்றது.

இக்களவு சம்பந்தமாகப் புலன்விசாரணை செய்த பொலிசார் கட்டிடப் பொருட்கள் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் சிலரைக் கைதுசெய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனையிறவுத் தடைமுகாமைத் தாண்டி

# நெல், அரிசி கொண்டுவர 'பர்மிட்' வேண்டும்

## அரசாங்க அதிபர் தரும் விளக்கம்

[யாழ்ப்பாணம், சனி]

யாழ்ப்பாணத்துக்கு நெல், அரிசி முதலியவற்றைக் கொண்டு வருவதற்கு ஆனையிறவுத் தடைமுகாமில் எவ்விததடையுமில்லை என்றவாறு பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகள் சம்பந்தமாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா நேற்று பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் செயலாளருடனும், காணி அமைச்சு செயலாளருடனும் தொடர்பு கொண்டார்.

இதுசம்பந்தமான முழுவிபரங்களையும் தமக்கு அறியத்தருமாறு அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆனையிறவுத் தடையைத் தாண்டி நெல், அரிசி முதலியனவற்றை எவ்வளவுதொகையும் எடுத்துச் செல்லலாம் என்று பத்திரிகைகளில் செய்தி வெளிவந்துள்ள போதிலும் உத்தியோக பூர்வமாக எதுவித அறிவித்தலும் அரசாங்க அதிபருக்கு கிடைக்கவில்லையாம்.

ஆயினும் விவசாயிகள் அவ்வப் பகுதி காரியாதிகாரியின் பர்மிட்டுடன் அரிசி, நெல் கொண்டுவந்தால் ஆனையிறவு தடை முகாமில் தடைசெய்யப்படமாட்டார்கள் என்று அரசாங்க அதிபர் இதுசம்பந்தமாக 'ஈழநாடு' பிரதிநிதியிடம் விளக்கம் கொடுத்தார்.

ஆனையிறவுத் தடைமுகாமில் அரசாங்க அதிகாரிகள் நியமிக்கப்படவிருப்பதாகவும் அவர்களே நெல், அரிசி சம்பந்தமான சோதனைகளை ஆனையிறவுத் தடைமுகாமில் நடாத்துவார்கள் என்றும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். இவ்வித சோதனைகளில் பொலிசார் ஈடுபடமாட்டார்கள் என்றும் அவர் கூறினர்.

இதுபற்றிய நடவடிக்கைகளைமேற்கொள்ளும் முகமாக அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகராவும், வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆரியசிங்காவும் இன்று ஆனையிறவு செல்கின்றனர். [ஈ]

## மட்டக்களப்பில் பகிஷ்கரிப்பு; உண்ணாவிரதம்

மட்டக்களப்பு, வெள்ளி

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள மாணவர்கள் இன்று பாடசாலை பகிஷ்கரிப்பு நடத்தினார்கள்.

கோட்டைமுனை அரசடிப் பிள்ளையார் கோவில் வீதியில் இன்று சுமார் 50 இளைஞர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள்.

அம்பாறை மாவட்ட தமிழ் இளைஞர் பேரவைக் குழு விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து இந்தப் பாடசாலை பகிஷ்கரிப்பு இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் கடந்த 10-ந்தேதி இரவு நடந்தமரண சம்பவங்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டு இந்த பகிஷ்கரிப்பு ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

## ஹொங்கொங் சிறையில் இரு யாழ். இளைஞர்கள்

கல்வியங்காடு, வெள்ளி

திருநெல்வேலியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் ஹொங்கொங் நாட்டில் சிறைவாசம் அனுபவித்து வருகின்றனர். போதை மாத்திரைகளை விற்பனை செய்த குற்றத்திற்காக இவர்கள் ஹொங்கொங் நகரச் சிறையில் இருவருடங்களைக் கழிக்கவிருக்கின்றனர்.

ஒரு கம்பெனிக் கப்பலில் பணிக்காகச் சேர்ந்த இவர்கள் அக்கப்பலில் ஹொங்கொங் சென்றதாகவும் கரையை அடைந்ததும் கப்பலில் தமக்குக் கிடைத்த போதை மாத்திரைகளை அங்குள்ள இரகசியப் பொலிஸ் ஒருவருக்கு விற்றதைத் தொடர்ந்து கைது செய்யப்பட்டு வழக்கு தாக்கல்செய்யப்பட்டதாகவும் வழக்கில் இருவருக்கும் இருவருடசிறைத்தண்டனை விதிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

## தடுக்கப்பட்ட நெல் கொடுபட்டது

எழுதுமட்டுவாள், வெள்ளி

அரிசி, நெல் எடுத்துச்செல்ல ஆனையிறவுத் தடையில்லை என்று ஒரு செய்தி வெளிவந்ததையடுத்துப் பலர் தமக்குத் தேவையான நெல்லை மூடை மூடையாகக் கொண்டுவர முனைந்தனர்.

ஒவ்வொரு வாகனங்களிலும் மூச்சுவிட இடமில்லாமல் நெல்லை ஏற்றிவந்த ஏழு வாகனங்களையும், 5 லொறிகளையும் நேற்று ஆனையிறவுத்தடையைத் தாண்டிச் செல்ல பொலிசார் அனுமதி கொடுக்க மறுத்துவிட்டனர்.

தமக்கு எந்தவித அறிவித்தலும் வராதபடியால் நெல்லையோ அரிசியையோ கொண்டுசெல்ல அனுமதிக்கமாட்டோம் என்று பொலிசார் வாகனங்களை மறித்துப் பின் வடபகுதிப் பொலிஸ் அதிபருடன் தொடர்பு கொண்டதைத் தொடர்ந்து நெல்லை ஏற்றிய வாகனங்களைப் பொலிசார் இரவு அனுப்பிவைத்தனர். (அ)

## ஆங்கில ஆசிரியர்களுக்கு நீங்களும் விண்ணப்பிக்கலாம்

[கொழும்பு, வெள்ளி]

ஆங்கில ஆசிரியர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான கஸட் அறிவிப்பு இன்றிரவு வெளியிடப்படவிருந்தது.

கஷ்டமான பிரதேசங்களில் உள்ள காலி இடங்களை நிரப்பும் நோக்கத்துடனேயே இதற்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்படுகிறது. இவ்வாண்டு ஆசிரியர்கள் ஓய்வு பெறுவதன் மூலம் ஏற்படக்கூடிய வெற்றிடங்களை நிரப்பவும் இந்த நியமனங்கள் உதவுமென கூறப்படுகிறது.

இந்த ஆசிரியர் நியமனங்களுக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்களின் கல்வித் தகமைகள், வயதெல்லைகள் பற்றிய முழுவிபரங்களும் அடங்கிய கசெட் அறிவிப்பு இன்று வெள்ளிக்கிழமை இரவு வெளியாகவிருந்தது. [இ. பி. ஏ-ஈ]

## 8-ம் திகதி பகிஷ்கரிப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களைக் கௌரவிக்கும்முகமாக ஜனவரி மாதம் 10ந் தேதி யாழ் வீரசிங்கம் மண்டபத்தின் முன்பு நடைபெற்ற பகிரங்கக்கூட்டத்தில் தமது பண்பை நிலைநாட்டி அமைதியாக இருந்தனர். அந்த வேளையில் கட்டவிழ்க்கப்பட்ட பொலிசார் தமது அநாகரிகமான பண்பைத் தமிழ்மக்கள்மீது காட்டினார்கள். இது இனரீதியாக நடைபெற்ற ஒரு சம்பவம் என்றே கூறலாம். காரணம் கொழும்பில் யு. என். பி. யால் நடாத்தப்பட்ட மாபெரும் சத்தியாக்கிரகத்தில் காலி வீதி உட்பட பல பிரதான வீதிகளும் சத்தியாக்கிரகிகளால் தடைசெய்யப்பட்டும் அரசாங்கமோ அல்லது பொலிஸரோ அதற்கு எதிரான ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் யாழ் நகரில் வீரசிங்கம் மண்டபத்திற்கு எதிருள்ள வீதியை மக்கள் தடைசெய்ததாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

இவை அனைத்தையும் கண்டிக்கும்முகமாக நாம் இம்மாதம் 8ந் தேதி வடக்கு கிழக்கு மாகாணம் அனைத்துக்கும் ஒரு பாடசாலைப் பகிஷ்கரிப்பை நடாத்த உள்ளோம். யாழ் சம்பவத்தை மக்கள் வன்மையாகக் கண்டிக்கிறார்கள் என்பதற்கு 11ந் தேதி எதுவித அறிவிப்புமின்றி மக்கள் முன்வந்து கடையடைப்புச்செய்து துக்கதினமாக அனுஷ்டித்தனர்.

## தெஹிவளையின் புதிய மேயர்

கொழும்பு, வெள்ளி

தெஹிவளை - கல்கிசை மாநகரசபையின் புதிய மேயராக திரு பியசேன சேனாதீர தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியைச் சேர்ந்தவரான திரு. பியசேன சேனாதீர ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## பாண்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

விநியோகம் ஆகியனவற்றைக் கவனித்துவருகிறார்கள் என்றும் அரசாங்க அதிபர் தெரிவித்தார். அந்தந்தப் பகுதி கூட்டுறவுச்சங்கங்கள், பேக்கரிகளுடன் தொடர்புகொண்டு பாண்விநியோகம் சம்பந்தமான ஏற்பாடுகளைக் காரியாதிகாரிகள் செய்துவருவதாகவும் அவர் கூறினர்.

தற்போதைய திட்டத்தின்படி சகல குடும்பத்தினருக்கும் பாண் கிடைக்குமென்று அவர் தெரிவித்தார்.

பாண் விநியோகத்தில் குறைபாடுகள் ஏதாவது இருந்தால் விரைவில் நீக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார். (அ)

## இன்று விசாரணை

(யாழ்ப்பாணம், சனி)

தமிழாராய்ச்சி மகாநாட்டு இறுதிநாள் அசம்பாவிதங்கள் குறித்து விசாரணை செய்வதற்காக பொதுமக்கள் சார்பில் நியமிக்கப்பட்டுள்ள பகிரங்க விசாரணைக்குழு இன்று தனது விசாரணையைத் தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்களும் பார்வையாளர்களாகக் கலந்து கொள்ள விரும்பம் தெரிவித்துள்ளதால், விசாரணையின் போது இவர்களும் கலந்து கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.

பாம்கோர்ட்டில் இன்று ஆரம்பமாகவிருக்கும் இவ்விசாரணைக்குழுவில் ஓய்வு பெற்ற நீதியரசர்களான திரு ஓ. எல். டி. கிரெட்ஸர், திரு வி. மாணிக்கவாசகர், முன்னாள் தென்னிந்திய இலங்கை திருச்சபை அத்தியட்சகர் திரு குலேந்திரன் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர். (ஈ)

இன்றைய விசாரணை காலை 10 மணி முதல் 12-30 மணி வரையும். பின்னர் 2 மணி முதல் 5-30 மணிவரை நடைபெறும் என்றும் பின்னர் பிரதி தினமும் காலை 9-30 மணிமுதல் 12-30 மணிவரையும் பிற்பகல் 2 மணி முதல் 5-30 மணிவரையும் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது.

## பங்களாதேஷுக்கு எண்ணெ வழங்க ஈராக் விருப்பம்

[டாக்கா, பெப். 1]

பங்களாதேஷுக்கு 10 லட்சம் தொன் மசகு எண்ணெயை வழங்குவதற்கு ஈராக் முன்வந்துள்ளது.

இந்த எண்ணெ விரைவில் பங்களாதேஷுக்கு வந்து சேரும் என்று டாக்காவில் வெளியான செய்திகள் தெரிவிக்கின்

## சிங்கள கவிதை தமிழில் மொழிபெயர்ப்பு

கொழும்பு, வெள்ளி

நூற்றாண்டுகாலப் பழமை வாய்ந்த 'லோவத சங்கராவ' என்ற சிங்கள கவிதைத் தொகுப்பு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளது.

இதனை சிங்கள மொழியிலிருந்து பேராதனையைச் சேர்ந்த பொவத்தை சிறி ஞானவங்காரதேரோ தமிழில் மொழிபெயர்த்துள்ளார். (சி பி ஏ-ஈ)

## பஸ் ரயில்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மமாகச் செல்பவர்களுக்கான சீசன் டிக்கட் 5 நாள் வார வேலை அடிப்படையிலேயே வழங்கப்படும். தற்போது விநியோகிக்கப்பட்டுள்ள சீசன் டிக்கட் தொடர்ந்து பாவிக்கப் முடியும் என்றும் அறிவிக்கப்பட்டது. இனிமேல் குறுகிய தூர சேவைகளைத் தவிர்க்கும் பொருட்டு குறுகிய தூர பஸ் சேவை ஊக்குவிக்கப்படமாட்டாது.

### ரயில் கட்டணம்

ரயில் கட்டணமும் 4-ம் திகதி முதல் அதிகரிக்கப்பட உள்ளது. ஐம்பது சதவீதத்தால் இந்தக்கட்டணம் உயர்த்தப்படும். பொதிகள், பார்சல்களின் கட்டணம் 25 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. ரயில்சேவையின் குறைந்த கட்டணம் 25 சதமாக இருக்கும்.

டீசல் எண்ணெய் விலை உயர்வு, சம்பள உயர்வு உதிரிப்பாகத் தட்டுப்பாடு காரணமாக இக்கட்டண உயர்வுகளைத் தவிர்க்கமுடியவில்லை என்று போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்த்தன நேற்றிரவு வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கூறியுள்ளார். (சி.பீ.ஏ.) (ஈ)

## மீண்டும் 'ஹெயர் கிறீம்'

கொழும்பு, வெள்ளி

மூலப்பொருட்கள் தட்டுப்பாடு காரணமாக உற்பத்தி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'ஹெயர் கிறீம்' இப்போது போது மீண்டும் பொதுச் சந்தையில் பெறக்கூடியதாக இருக்கிறது.

இப்போது விற்பனைக்கு வந்திருக்கும் "ஹெயர் கிறீம்" போத்தல்கள் முன்பைவிட இரட்டிப்பான விலையில் விற்பனையாகிறது. (சி பீ ஏ)

## 44 லட்சம்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ளும் இந்நாட்டிற்கு கடத்தி வரும் சமயம் கைப்பற்றப்பட்டதாகவும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இந்நாட்டிலிருந்து கடத்தி செல்லும் போது கைப்பற்றப்பட்ட பொருள்களின் விபரம் வருமாறு:

0 சாதிக்காய் ரூ.7,400
0 கிராம்பு ரூ.882,410
0 தேங்காய் எண்ணெ ரூ 11,795
0 மீன்பிடிவலைகள் ரூ 2000

கடத்தல் பொருட்கள் கைப்பற்றப்பட்ட முக்கிய இடங்கள் பற்றிய விபரமும் அங்கு கைப்பற்றப்பட்ட பொருட்களின் பெறுமதியும் வருமாறு:

0 ஆழ்கடலில் ரூ.20 லட்சத்து 5 ஆயிரம்.
0 வல்வெட்டித்துறை பகுதி ரூ. 6 லட்சம்
0 காங்கேசன்துறைப்பகுதி ரூ.79,000
0 பொன்னாலை பகுதி ரூ. 2 லட்சம்
0 திருவடிநிலையம் ரூ. 79,000
0 ஆளியவளை பகுதி ரூ. 1,75,000
0 செம்பியன்பற்று ரூ. 28,600
0 குடத்தனை ரூ. 58,000
0 யாழ்ப்பாணம் ரூ. 3,57,000
0 திருநெல்வேலி ரூ. 50,000
0 பருத்தித்துறை ரூ. 100,950

கடந்தவருடம் கடத்தலில் சம்பந்தப்பட்ட 2 கார்களும், 4 லொறிகள், 20 வள்ளங்கள் கைப்பற்றப்பட்டதாகவும், அரசாங்க அதிபர் தெரிவித்தார். (ஈ)

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி ... இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 1974-ம் ஆண்டு பெப்ரவரி 2-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. P. Box. No. 49, Jaffna; Telegrams: "Eelanadu" ... பதிவுசெய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org